# இன்றைய சமுதாயத்தில் பெண்களின் நிலை

## விக்னா பாக்கியநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MANN (ERDE) MAGAZIN**
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சமுதாயத்தில் பெண்களின் நிலை

ஆசிரியர் :
**விக்னா பாக்கியநாதன், பி.ஏ.,**

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926
தொலைநகல் : 0091-44-4346082

மின் அஞ்சல் : E-mail : Manimekalai @ eth.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ இன்றைய சமுதாயத்தில் பெண்களின் நிலை |
| ஆசிரியர் | ➢ விக்னா பாக்கியநாதன் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2000 |
| பதிப்பு விபரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.2 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 96 |
| நூலின் விலை | ➢ ரூ. 20.00 |
| அட்டைப்பட ஓவியம் | ➢ திரு. ஜமால் |
| லேசர் வடிவமைப்பு | ➢ கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர், சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ➢ ஸ்கிரிப்ட் ஆப்ஸெட், சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | முகவுரை ------------------------------------------ | 4 |
| 1. | இன்றைய சமுதாயத்தில் பெண்களின் நிலை | 9 |
| 2. | மானிடவியல் ---------------------------------------- | 19 |
| 3. | மானிடத்தின் மறுபக்கம் ------------------------ | 21 |
| 4. | தாழ்வு மனப்பான்மை ---------------------------- | 26 |
| 5. | பலம் குறைந்தவர்களா? ------------------------ | 33 |
| 6. | நால்வகைக் குணங்கள் நங்கைக்கு அவசியமா? | 43 |
| 7. | பெண்ணே உன் கதி? ----------------------------- | 55 |
| 8. | கல்லும் புல்லும் ------------------------------- | 63 |
| 9. | சமுதாய அடிமட்டத்தில் மாற்றம் எப்போது? | 65 |
| 10. | விழி வீதியிலே ----------------------------------- | 73 |
| 11. | பெண் சுதந்திரத்துக்காக ஆணினம் வாதாடுவது எப்போது? --- | 75 |
| 12. | தாலி அடிமைச் சின்னமா? ------------------- | 79 |
| 13. | விவாகாரத்தால் விபரீதமா? ------------------ | 86 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

எமது சமுதாயத்தில் பெண்களின் நிலை பண்டைக்காலம் தொட்டு ஒரு அடக்கு முறைக்குட்பட்டதாகவே இருந்து வருகிறது. பெண்களின் சுதந்திரம் கோரிப் பல புரட்சியாளர்கள் பல்வகைப்பட்ட ரீதியில் கோஷமெழுப்பினர். ஆனால் இன்றுவரை பெண்ணுலகம் அக்கோஷங்களைக் கேட்காத அளவுக்கு, அவர்தம் செவிகளைச் சமுதாயம் அடைத்து வருகிறது. ஆனால் அங்கே கோஷங்களைச் செவிமடுத்த சில பெண்கள், சமுதாயத்தில் புதுமைப்பெண்ணின் பிரதிநிதிகளாகக் காலடி எடுத்து வைத்து, மற்றவர்களையும் தமது பாதையில் இழுத்துச் செல்வது பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய விடயமே.

பெண் நிலைவாதங்கள் பெண்ணுரிமைப் போராட்டங்கள் நம் சமுதாயத்தில் இல்லாதொழிய வேண்டுமானால், நமது சமுதாயம் மாற்றமடைய வேண்டும். சமுதாய அடிமட்டத்தில் பல துருப்பிடித்த இரும்புத்துண்டுகளை வைத்து விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலெழுந்த வாரியாக, பெண் விடுதலை எனும் இரும்பாணிகளை அறையும்போது அவை அந்த அடிமட்டத்தில் போய்ச் சேரமாட்டா. அத்துடன் அந்த ஆணிகளின் முனைகள் மழுங்கடிக்கப்பட்டுவிடும். காரணம் துருப்பிடித்த இரும்புத்துண்டுகள் கீழே இருக்கின்றன. ஆனால் இந்த இரும்புத்துண்டுகளை வெளியே எடுத்த பின்பு அந்த ஆணிகளை அறைந்தால் சுலபமாக அடிமட்டம் வரை சென்று விடும். இது போன்றதுதான் எமது சமுதாய அடிமட்டமும் ஆகும். அதில் அறையப்படும் பெண்ணுரிமை, பெண் நிலைவாதம் போன்ற ஆணிகளை அறைவதற்கு நாம் எமது சமுதாயத்தில் அமிழ்ந்தியுள்ள இரும்புத் துண்டுகள் எனும் பழைய, இறந்துவிட்ட மரபுகளை வெளியே எடுக்க முயலவேண்டும். அவ்வாறு வெளியிலெடுத்த பின்னர்தான் நாம் எதிர்பார்க்கும் இலக்கை எதிர்கொள்ள முடியும். இதற்கு இரு இன மனங்களும் புரிந்துணர்வுடன் ஒருமைப்படவேண்டும். மனங்கள் மாற்றமடையும் போதுதான் சமுதாயம் மாற்றமடையும். மலர்ச்சி பெறும். ஒவ்வொருவரும் சேர்ந்த கூட்டினைப்பே சமுதாயம் ஆகும் எனவே ஒவ்வொருவரின் மனமும் மாற்றமடைய சமுதாயம் திருப்பம் அடையும் எனலாம்.

பெண்ணடிமைக்குப் பல காரணங்கள் சமுதாயத்தில் இழையோடிக் காணப்பட்ட போதும், பொதுவாக ஆண்களும் இதற்கு ஒரு காரணம் எனக்கூறவேண்டியுள்ளது. சமுதாயம் ஆண்களின் பக்கம் சார்ந்து நின்று, பெண்களின் உரிமைகளுக்குத் தாழ்ப்பாள் போடுகின்றது. அத்துடன் சில பெண்கள் தமது வாழ்க்கையில் ஏதோ சில உரிமைகளை மட்டும் அனுபவித்துக்கொண்டு, ஏனைய தம் சுதந்திரங்கள் பொசுக்கப்படுவதை உணராமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களும் ஒருவழியில் பெண்ணடிமையை வளர்த்து வருபவர்களின் பட்டியலில் அடங்குகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பண்டையகாலம் போல் இன்னும் அடிமை வாழ்வு வாழவேண்டிய தேவையில்லை. காலத்துக்கு ஏற்ற வகையில் மக்கள் தம் வாழ்க்கை முறைகள் மாறிவிட்டன. ஆணும் பெண்ணும் சமத்துவமாக வாழவேண்டும் என்ற உண்மையைச் சமூகச் சீர்திருத்தவாதிகள் விளக்கிச் சென்றுள்ளனர். அதன்படி இன்று (நாம்) சீர்திருத்தம் செய்து சிறப்பான கலாச்சார அமைப்பை உருவாக்கி சமுதாயத்தைப் புதுமை வழிக்குக்கொண்டு செல்லும் பொறுப்பு இன்றைய சந்ததியினருக்கு உண்டு.

பெண்கள் துணிவுடன் தாமும் சமுதாயம் அங்கத்தினர் என்ற உண்மையை உணர்த்தி, தங்கள் உரிமையைப் பெற முன்வரவேண்டும். தாங்கள் ஏன் சமுதாயத்தினின்றும் ஒதுக்கப்பட்டு, இரண்டாந்தரப் பிரஜையாக இருக்கின்றோம் என்பதை ஒவ்வொரு பெண்களும் உணர்தல் அவசியம்.

பெண்கள் வீட்டு வேலைகளிலேயே மூழ்கியிராது சகல துறைகளிலும் முன்னணியில் நின்று தம் திறமையை வெளிக்காட்டக் கூடிய காலத்திலேதான் வாழ்கின்றோம். இவ்வாறான இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு பெண்களும் தத்தம் நிலைகளை, உரிமைகளை உணர்ந்து வாழ முனையவேண்டும் என்ற ஒரு சிந்தனையில் எழுந்த கருத்துக்களால் 'இன்றைய சமுதாயத்தில் பெண்கள் நிலை' என்ற இந்நூல் தோன்றியுள்ளது.

மானிடத்திற்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. அவை ஆண் பெண் என்ற இனங்களாகும். இதுவே உண்மையுமாகும். இதை உணர்ந்தும் உணராதது போல் சமுதாயம் இன்றும் இருக்கின்றதே என்பதை எண்ணும்போது வேதனையாக உள்ளது. இச்சிந்தனையின் உந்துதலும் இந்நூல் எழுவதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய காரணம் எனலாம். இங்கே எழுதப்பட்ட கருத்துக்கள் எமது சமுதாயப் பெண்களின் நிலை பற்றியும், அதைப் புரிந்து சமத்துவம் கோரும் யதார்த்த நிலையினையும் முன் வைக்கின்றன. இவை வாசிப்போருக்கு ஆக்கபூர்வமான பாதிப்புகளை ஏற்படுத்தினால் இந்நூலை எழுதியதன் பலனையும் வெற்றியையும் பெற்ற திருப்தியைப் பெறுவோம்.

25.5.2000 *விக்னா பாக்கியநாதன் பி.ஏ.*
மேற்கு ஜெர்மனி.


***முகவரி :***

Mr. S. Packiyanathan,
"Kalai Vilakku"
Droote - 19,
44328 Dortmund,
W. Germany.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் பிற நூல்கள்!

1. சிறுவர்களுக்கான சிறு நாடகங்கள்
2. இதயச் சிறை
3. பணம் பந்தியிலே
4. கவிதைச் சோலை
5. தூரத்து விடியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சமுதாயத்தில் பெண்களின் நிலை

இன்றைய சமுதாயத்தில் பெண்களின் நிலை என்ற தலைப்பை நோக்கின் முக்கியமாகத் தாய்நாட்டில் எமது சமுதாயத்தின் பெண்களின் நிலையையே குறித்து நிற்கின்றது. மேலும் எமது சமுதாயப் பெண்களின் நிலைபற்றி அறிய மேல்நாட்டுச் சூழ்நிலையில் வாழும் எமது பெண்களின் வாழ்க்கை நிலையினை நோக்குவது எவ்விதத்திலும் பொருத்தமற்றது. எனவே நாம் தாய்நாட்டுச் சூழ்நிலையில் எமது சமுதாயப் பெண்ணின் நிலை பற்றி ஈண்டு நோக்குதல் சிறப்புடையதாகும்.

ஏறக்குறைய கடந்த பத்தாண்டுக் காலங்களில் எமது பெண்களிற் சிலர் தாய்நாட்டுச் சூழலைவிட்டு மேலைநாட்டுச் சூழலில் வாழ்ந்து வருகின்றார்கள். இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய காலக்கட்டுப்பாடுகளின் கெடுபிடியிலிருந்து ஓரளவுக்குப் பெண்கள் விலக்கப்பட்டுள்ளார்கள் என ஆதாரமாகச் சான்று பகர்கின்றன. இதனால் நம் சமுதாயப் பெண்களுக்குப் பூரண சுதந்திரம் கிடைத்துவிட்டது எனக்கூற முடியாது. ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக அடிமைத்தளையிலிருந்து விடுபட்டுள்ளார்கள் என்று கூறமுடியும். முதலில் மேல் நாடுகளில் வாழும் தமிழ்ப் பெண்களுக்கு ஓரளவுக்கு, சகல நிலைகளிலும் சுதந்திரம் கிடைத்து அனுபவிக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் இங்குள்ள சூழ்நிலையே எனலாம். இதனால் இங்குள்ள பெண்களுக்குச் சுதந்திரம் இல்லை எனக் கூறமுடியாதுள்ளது. ஓரளவுக்கு மேலைநாட்டுப் பெண்களுக்குரிய உரிமைகளில் சிலவற்றைத் தாமும் கடைப்பிடிக்க முயல்கிறார்கள். அதற்கு ஒன்றும் செய்யமுடியாத ஆடவர் குழாம் ஒத்தூதுகின்றது. அவ்வாறு நிற்கவேண்டிய கட்டாயம் இங்கு தானாகவே உருவாகின்றது. இதை மட்டும் வைத்துக்கொண்டு, இவை நம் தாய்நாட்டிலும் தொடரும், தொடர்வதற்கு அனுமதி வழங்க ஆண் வர்க்கத்தினர் காத்திருக்கின்றனர், என்று கூறமுடியாது. எனவே தான் நிரந்தரமற்ற, அந்தர நிலையில் வசிக்கும் பெண்களின் நிலையை நோக்காது தாய்நாட்டில் எமது பெண்களின் நிலையை ஆராய்வதே பொருத்தமானதும், அவசியமானதுமாகும்.

ஒரு நாட்டில் ஒரு இனம் அடக்கப்படுவதற்கும், மறு இனம் வளர்வதற்கும் முக்கியகாரணி அந்நாட்டு அரசியற் பொருளாதாரச் சூழ்நிலையே எனலாம். இவற்றை மையமாகக்கொண்டு சமுதாயப் பின்னணியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்கிறது. புதியன சேர்க்கப்படலாம், பழையன நீக்கப்படலாம். எனவே எமது சமுதாயப் பெண்களின் அடக்குமுறைக்கு முக்கிய காரணம் அரசுயந்திரமும், அதன் வழியுள்ள பொருளாதார நிலையும் எனலாம். இவை எம் கண்களுக்கு ஒருபோதும் தெரியமாட்டாது. அவ்வாறு தெரிந்தாலும் அதை மாற்றாக்கூடிய வலு அபிவிருத்தியடைந்து வரும் எமது நாட்டுக்குக் கிடையாது.

அடுத்து முக்கிய காரணம் நம்முன்னோர் கடைப்பிடித்த கட்டுப்பாடுகள் என வாழையடி வாழையாகப் போற்றப்பட்டு வந்த பண்பாடுகள் எனலாம். இறுதியாக பெண்களுக்குள்ள உடற் கூற்றமைப்புகள் இவை மூன்றும் தமது ஆதிக்கத்தை ஒரே தருணத்தில் செலுத்துகின்றன. இவற்றின் காரணமாக எமது சமுதாயத்தில், தாய்நாட்டில் பெண்களுக்குப் பூரணசுதந்திரம் இல்லை என்றே கூறமுடியும். அச்சுதந்திரத்தை ஆண்வர்க்கம் ஒரு போதும் பெண்களுக்கு வழங்க மாட்டாது என்பதும் உண்மை. அந்தளவுக்கு கருவிலேயே ஆண்கள் உயர்ந்தவர்கள், பலசாலிகள் என்ற கருத்து அவர்களுக்கு ஊட்டப்படுகிறது.

அதே போன்று பெண்கள் அடக்கமாக இருக்கவேண்டும், வெளியுலகில் கண்டபடி திரியக்கூடாது, ஆண்கள்தான் எதுவும் செய்யலாம், பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் உண்டு என இவர்களுக்கும் உதிரத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டப்படுகின்றன. இவ்வாறு உதிரத்துடன் ஊறியவை, அதே உதிரம் ஓடும்போது நிறுத்தமுடியுமா? என்ற ஐயம் ஏற்படுகின்றது.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்" எனப் பாடிச் சென்றார் பாரதியார். ஆண்களுக்குள்ள அதேயுரிமை பெண்களுக்கும் இருக்கவேண்டும் என்பது இவர் கருத்து. பாரதியாரின் காலத்தை விட இப்போது பெண்ணுலகம் எவ்வளவோ முன்னேறிவிட்டது. ஆனால் பாரதியார் கூறிய "ஆணுக்குப் பெண் சமம்" என்ற கருத்து எமது சமுதாயத்தில் வலியுறுத்தப்பட்டு வழக்கில் இல்லை. எவ்வளவுதான் பெண்கள் முன்னேறினாலும் எமது சமுதாய, கலாச்சாரப் பண்பாடுகள் தடைக்கல்லாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அடுத்து ஒரு பெண் உடற்கூற்றமைப்பில் எந்த வகையிலும் ஆணுக்குச் சமமாகமுடியாது. எனவே இதை அடிப்படையாகக் கொண்டு இங்கே ஒரு அடக்குமுறை ஏற்படுகின்றது. ஆணும் பெண்ணும் சமம் என்று கூறிக்கொண்டு மனம்போனபடி பெண்கள் நம் நாட்டில் உலவி வரமுடியுமா? உலவி வரமுடியும். ஆனால் அவளது நற்பெயருக்கு உத்தரவாதம் இல்லை, கற்புக்கு பாதுகாப்பில்லை. இங்கேதான் பெண் உடற்கூற்றமைப்பு தோற்றுவிட்டு, தனக்குள் ஒரு பயத்தை ஏற்படுத்தி வட்டத்துக்குள் வாழ முனைகின்றனர். இதற்குக்காரணம் என்ன? மறைமுகமாக அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம்தான் பின்னணியாக இருக்கின்றதெனக் கூறினாலும் நேரடிக் காரணம் ஆண்வர்க்கத்தினரே என எண்ணவேண்டியுள்ளது.

பெண்களுக்குரிய சுதந்திரத்தை ஆண்கள் வழங்கவேண்டும். அவர்கள் சமூகத்தில் சம அந்தஸ்துள்ள ஒரு இனம் என்பதை ஆண்கள் ஏற்கவேண்டும். மனைவி என்பவள் வேலைக்காரியாகவோ, பிள்ளை பெறும் யந்திரமாகவோதான் இருக்கவேண்டும் என்ற கொள்கை சாகடிக்கப்பட வேண்டும். ஒரு குடும்பத்தை எடுத்துக்கொண்டால் அங்கே பெண்ணுக்கு, முதலில் பெற்றோரால் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. அடுத்து சகோதரனால் விதிக்கப்படுகின்றது. அதன் பின்பு கணவனாலும், பின் மகனாலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இத்தன்மையை பெண் சுதந்திரத்தை வழங்கவிருக்கும் எந்தவொரு ஆண்மகனாவது மறுத்துக்கூற முடியுமா? இது இரு சாராரிடையேயும் பரம்பரை பரம்பரையாக ஊறிவந்த மரபு. இதை மாற்றியமைக்கக் கூடியளவுக்கு எமது நாட்டு அரசியல் பொருளாதாரச் சமயச் சூழ்நிலைகள் இடம் கொடுக்கமாட்டா. இவை வளர்ச்சியடையும் போதுதான் கலாச்சாரங்களிலும் ஓரளவு தளர்ச்சி ஏற்படும். எனவே அத்தகைய வளர்ச்சியை நாம் இன்றயை காலகட்டத்தில் எதிர்பார்க்க முடியாது. எனவே பெண் சுதந்திரத்தையும் எதிர்பார்க்க முடியாது.

சம அந்தஸ்தைப் பெண்களுக்கு வழங்கவேண்டும் என்று எண்ணம் கொண்ட ஆண்களிற் சிலர் "நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன சுதந்திர நீதிபதியா? எங்களை ஏன் பெண்கள் கேட்கவேண்டும்? எங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது பெண்களுக்குச் சுதந்திரம் வழங்குவதற்கு? ஏன் பெண்களை அடிமைப்படுத்த வேண்டும்? நாங்களும் அவர்களைப் போலதான் வாழ்கிறோம், அவர்களும் சகல சுதந்திரத்தையும் பெற்று முன்னேறுகிறார்கள். அடக்குமுறைக்குக் காரணம் ஆண்கள்தான் என்று ஏன் எம்மைக்குறை கூறுகிறார்கள்?" என வாதிக்கிறார்கள். இவ்வாதங்கள் காலம் செல்ல, "கும்பலிலே கோவிந்தா" என்பது போல் மாறிவிடுகின்றன. அதாவது இவ்வாறு கூறியவர்கள் திருமணமாகும் வரைதான் இத்தகைய பேச்சுக்களில் ஈடுபடுவார்கள். திருமணமாகி மனைவியென்று ஒருத்தி அவர்களின் வாழ்வுக்குத் துணை வரும்போது மேற்கூறிய அவர்களது சொந்தக் கருத்துக்கள் மெல்ல மெல்ல ஈடாட்டம் காணத்தொடங்கும். அதற்கு அவர்களில் குற்றமில்லை, அவர்கள் வாழ்ந்த சமுதாயப் பண்பாட்டுச் சூழல்தான் முதற்காரணம். நேரடிக்காரணம் ஆண்களின் மனோபாவம்தான் எனக்கருதினாலும் அடிப்படைக் காரணம், எம் சமுதாயச் சூழ்நிலையே அவ்வாறான நிலைக்கு வளர்த்து விடு கிறது.

திருமணத்திற்கு முன்பு ஒரு ஆணும் பெண்ணும் பற்பல புரட்சிக் கருத்துக்களைப் பரப்பி வருவதோடு அவற்றுக்கு முன்னோடியாக வாழ்வோம் எனப்பறைசாற்றிய பலர் பெட்டிப்பாம்பாக குடும்பம் என்ற ஒரு வட்டம் வந்தவுடன் அடங்கிவிடுகிறார்கள். தம் கொள்கையிலிருந்து விலகி, அது அப்போது, அந்நேரம், இப்போது அல்ல என விலகிய மனத்தினராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ முற்படுகின்றார்கள். சூழ்நிலைகளும் அவர்களை மாற்றிவிடுவதில் வென்றுவிடுகின்றன.

மேலைநாட்டுக் கலாச்சாரங்களில் வாழ்ந்து கொண்டு மேலைநாட்டுப் பெண்கள் போல் எமது நாட்டுப் பெண்களுக்கும் சுதந்திரம் கிடைக்கும் என்றோ, உண்டு என்றோ ஒருபோதும் எண்ணிவிடமுடியாது. மேல் நாட்டு அரசியல் பொருளாதாரம், கலாச்சாரம், அபிவிருத்தி ஏணியின் உச்சியில் நிற்கிறது. எமது அரசியல் பொருளாதாரம், கலாச்சாரம் என்பன அதில் ஏறவில்லை. ஏணியின் அருகிலேதான் நிற்கின்றது. இவ்வாறான வித்தியாசமான சூழ்நிலைகளை வைத்துக்கொண்டு பெண் சுதந்திரம் கிடைக்கும், சம அந்தஸ்து, வேலை வாய்ப்பு என்பனவெல்லாம் பிரச்சினையான விடயங்களே. படித்த பெண்கள் தான் இவற்றையெல்லாம் ஓரளவு உடைத்து முன்னேறி வருகிறார்கள். இதற்குக்காரணம் என்ன? பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட சமவுரிமையா? அந்தஸ்தா? இல்லை... அவள் படித்த படிப்புக்கு, வகிக்கும் பதவிக்கு, அவளின் பதவி அதிகாரத்துக்கு, வைத்திருக்கும் பணத்திற்கு, தான் அங்கே சமவுரிமை வழங்கப்பட்டு, ஆணுக்குப் பெண் சமம் என்று ஆகிவிடுகிறார்கள்.

படிக்க வாய்ப்பற்ற பெண்களுக்கு இந்தச் செல்வாக்கு, சமவுரிமை உண்டா? பேசா மடந்தையாக ஆண்கள் போடும் கட்டுப்பாட்டு வட்டத்துக்குள் வாழ்ந்து, வாய் பேசும் மிருகமாக வாழ்ந்து இறக்கும் பெண்கள் எத்தனை எத்தனையோ! பெண்கள் வகிக்கும் பதவிக்கு மூலகாரணமே சம அந்தஸ்துதான், அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுக்குச் சுதந்திரம் இருந்தபடியாற்றான் அவள் படித்து பலதுறைகளிலும் முன்னேற்றமடைகிறாள் எனப் பலர் அபிப்ராயம் தெரிவிக்கலாம். உண்மையான அபிப்ராயங்களே. ஆனால் இந்த அடிப்படை உரிமைகள் ஆண்களைப்போல் ஓரளவுக்கு பெண்களுக்கு உண்டு. ஆனால் இவற்றை நாம் சம அந்தஸ்து என ஏற்கமுடியாது. அவ்வாறு கருதினால் பெண் என்ற ஜென்மத்தையே ஆண்களுடன் வாழப் பிரமன் படைத்து விட்டதே ஒரு சம அந்தஸ்துதானே என்று வாதாடவும் சிலர் வந்துவிடலாம்.

ஆரம்ப, அடிப்படை, உயிரியற் தேவைகள் சமமாக இருக்கும்போது அவை சம அந்தஸ்து எனக்கூற முடியாது. ஆண் பெண் வளர்ந்து வரும் சமுதாயச் சூழ்நிலைகள், சமயச் சூழ்நிலைகள் ஆகியவற்றில் பெண் பூரணத்துவ சமமாக ஆண்களுக்கு முன்னே நிற்கிறாளா? பெண் சுதந்திரத்தைப் பேணவேண்டும் அல்லது பேணுவது மாதிரி கருத்து தெரிவிக்கவேண்டும், பெண் பக்கத்தின் வரவேற்பை தான் பெறவேண்டும் என்பதற்காக, சொந்தக் கருத்தைவிட்டு மேலோட்டமான கருத்துக்களை வலிந்து முன் வைக்கவேண்டாம்.

சமுதாயக் கட்டுப்பாடு, மதக்கட்டுப்பாடுகளுக்குள் கிடந்து நாறி அழுந்தி வரும் பெண் சமுதாயத்திற்கு மேலெழுந்தவாரியாகக் கூறும் சமத்துவம் உண்டா? எமது நாட்டைப் பொறுத்தவரை, சமுதாயத்தைப் பொறுத்தவரை பெண்களின் நிலை ஏற்ற இறக்கமேயன்றி சமம் அல்ல எனக்கூற முடியும். படித்த,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவுள்ள ஒரு சில பெண்கள் சமுதாயத்தில் துணிந்து முன்னிற்கும் போது காலம் செல்லச்செல்ல, சமுதாயத்தினின்றும் ஒதுக்கப்பட்டவளாகின்றனர். இது தானா சமுதாயம் வழங்குகின்ற சமத்துவம்? வெளிநாடுகளில், மேலை நாடுகளில் வாழும் ஆண்கள் இங்குள்ள பெண்கள் வாழ்க்கை முறைகளை நன்கு கவனிக்கிறார்கள். அப்படிக் கவனித்தும், அவ்வாறு வாழத்தமது பெண்களுக்கும் உரிமையுண்டு வாழலாம் எனச் சம்மதிப்பார்களா? ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதாவது என்பது போல் மேல்நாட்டுப் பெண்கள் வாழ்வும் எமக்குதவாது எனக் கருதுகின்றனர்.

அதேவேளை எம்மிற் பல பெண்களும் இதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறோம். இதைவிட உரிமையுடன் பெண்களே பெண்களை அடக்கும் முறைகளும் எமது கலாச்சார வரலாற்றில் உண்டு. குடும்ப உறவுகளில் உண்டு. இன்னும் பெண்களைப் பற்றிப் பெண்களே குறைகூறிப் புரட்சி செய்பவளை, காலத்திற்கேற்ற வகையில் கட்டுப்பாடுகளை விலக்கி வாழ முனைபவளை அடக்கி ஒதுக்குகிறார்கள். இவ்வாறான சூழல் நம் நாட்டில் இருக்கும் போது எமது சமுதாயப் பெண்களின் நிலை என்ன? என்பதற்கு மேலும் விளக்கம் சொல்லத் தேவையில்லை.

பெண் அடக்குமுறை வட்டத்தைக் கடந்து வந்து பெண் சுதந்திரத்தை மேற்கொள்ளும் பெண்களை ஊக்குவிக்க ஒரு சில ஆண்கள் காத்திருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் "யானைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிக்கு சோளப்பொரி” எவ்வாறு பொருத்தமற்றதோ, அப்படியேதான் இவர்களின் பெண் சுதந்திர தாகம், மற்றைய விழுங்கிடும் சுதந்திர தாகத்தின் முன்னே அற்பம் எனப்போய் விடுகின்றது. இவ்வாறிருந்தும் அவற்றை எண்ணி மௌனமாக இராது எழுச்சிகொண்ட பெண்கள் ஒன்று கூடி தற்றுணிவுடன் தம் நிலையினின்றும் வழுவாமல் சுதந்திரம் காண முன்வரவேண்டும். வந்துகொண்டும் இருக்கின்றார்கள். இத்தகைய பெண்களுக்கு சமூகத்தின் நாலா பக்கங்களிலும் இருந்து கல்லெறிகள் விழும். இவ்வாறு எறிபவர்கள் வயோதிப மாதரும், பழமைவாதிகளும், ஆண்களில் பலரும்தான் என்பதும் உண்மை. இவற்றைப் பொருட்படுத்தாது பெண் சுதந்திரத்தைப் பேண இயன்றவரை பெண்கள் முன்வரவேண்டும்.

பெண் சுதந்திரம் என்பது ஆண்களாற் கிடைக்காது. ஆனால் அவர்களின் ஒத்துழைப்பு வேண்டும். ஆண்களின் ஒருமைப்பாட்டிலேதான் பெண்கள் புரட்சிச்செய்து சுதந்திரம் பெறவேண்டும், என்ற நிலை உருவாகியுள்ளது. எனவே எழுச்சி கொண்ட பெண்களே! விழிப்படையுங்கள். எந்தளவுக்கு எம் சுதந்திரம் வீட்டிலும், சமுதாயத்திலும் உண்டு என எண்ணிப்பாருங்கள். இவ்வாறு எண்ணுவதே ஓரளவுக்கு விடுதலைப்பாதைக்கு முதல் அடி வைத்தமைக்கு ஒப்பானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடவியல்

நாணயம்,
நாணயமானது.

நாணயத்திற்குப் பக்கம் இரண்டு,
நியாயமாக இரண்டும் சமபக்கம்,
இந்த நாணயம் போன்றது தான்,
இந்த மானிடம்!

மானிடம் எனும் நாணயத்துக்கும்
இரண்டே பக்கங்கள்.
அதன்
ஒரு பக்கம் ஆணினம்
மறுபக்கம் பெண்ணினம்.

ஆணுக்குப் பெண் சரிசமானம்
இதை எமது சமுதாயம்-இன்னும்
உணராதிருப்பதனாலோ,
உணர்ந்தும் ஏற்க மறுப்பதனாலோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும்
பெண்நிலை வாதங்கள்
தொடர் சங்கிலிகளாக,
கோஷங்களின் சரங்களாக,
நீண்டு கொண்டே போகின்றன.

மாலையின் உருவில் இன்னும் இல்லை.
ஆனால்,
சிவனின் இடப்பக்கம் உமை,
மானிடத்தின் ஒரு பக்கம் பெண்ணினம்
என்பதுவே மானிடவியல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடத்தின் மறுபக்கம்

மானிடத்தை ஒரு நாணயமாக உருவகப்படுத்தி, அந்த நாணயத்தின் இரு பக்கங்களாக ஆண்களும் பெண்களும் இருக்கின்றார்கள் என்பதே உலகியலின் உண்மைத் தோற்றமாகும். எனவே மானிடம் எனும்போது இந்த இரண்டு பக்கங்களும் அவசியமே. ஒரு பக்கம் தனித்திருந்து ஒன்றையும் சாதிக்கமுடியாது. இரு பக்கங்களும் சம அளவான பங்களிப்பையே, ஒரு நாணயம் உருப்பெறுவதற்கு வழங்குகின்றன. அதே போன்று மானிடத்தின் சமத்துவமான இரு பக்கங்களைக் கொண்டு உலகம் இயங்குகிறது. இந்த இரு பக்கங்களிலும் பெரியது சிறியது என்றோ, உயர்வு தாழ்வு என்றோ எந்தவித வேறுபாடும் இல்லை. அப்படி இருந்திருந்தால் மானிடம் என்ற நாணயம் பரிபூரணத்துவம் பெறமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணின்றிப் பெண்ணும் பெண்ணின்றி ஆணும் இல்லை. உயிரினத் தோற்றங்களுக்கும், உலக இயக்கங்களுக்கும் இந்த இரு இனங்களும்தான் மூலாதாரம் ஆகும். பொதுவாக மனித சமுதாயம் எனும்போது ஆணினமும் பெண்ணினமுமேதான் அடங்குகின்றன. இந்த இரு இனங்களும் ஒன்றையொன்று சார்ந்து ஒன்றில் ஒன்று தங்கி வாழ்வதனாலேதான் குடும்பம், சமூகம், சமுதாயம், உலகம் என இயங்குகிறது. இரு இனங்களிலும் ஏதாவது ஒரு இனம் இல்லையானால் அதைச் சமுதாயம் எனக்கூற முடியாது. எனவே ஆண்+பெண்=உலகம் என்ற பெறுமானம் வியாபித்து நிற்கிறது.

"சிவனின்றிச் சக்தி இல்லை, சக்தி இன்றிச் சிவனில்லை" என்ற புராணவரலாறுகள் எல்லாம், இந்த இரண்டு பக்கங்களையும் சமமான பக்கங்கள் என்றே வலியுறுத்துகின்றன. பெண்ணின்றி ஆணில்லை, ஆணின்றிப் பெண்ணில்லை. இரண்டும் தனித்து இயங்காதவை. மேலும் மானிடத்தின் ஒரு பக்கமாக, சமபக்கமாக பெண் இருந்தாலும், இந்த உலகமே பெண்மயமாகத்தான் உள்ளது. உதாரணமாக செல்வத்தை திருமகள் என்றும், தானியத்தைத் தானியலட்சுமி என்றும், வீட்டைக் கிருகலட்சுமி என்றும், வீரத்தைப் பராசக்தி என்றும், கல்வியைச் சரஸ்வதி என்றும், தண்ணீரைக் கங்கா தேவி என்றும், மண்ணைப் பூமாதேவி என்றும், பேசும் மொழியைத் தாய்மொழி என்றும், பிறந்த நாட்டைத் தாய்நாடு என்றும், பெண்ணினத்தின் நாமங்கள் நம் வாழ்க்கையில் பரவி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடம் என்ற நாணயத்தின் ஒரு பக்கம் ஆண், மறுபக்கம் பெண்ணாக இருக்கும்போது ஏனோ பெண்ணினத்தைக் கீழ்மைப்படுத்தி அடிமையாக, வீட்டு மிருகமாகச் சமுதாயம் எண்ணியது என்பது விந்தைதான். மனித சமுதாயத்தில் பெண்ணினத்திற்குச் சமநீதி கிடைக்காத நிலை பல்லாண்டு காலமாக நீடித்து வந்துள்ளது. பெண் பேதையராக, மெல்லியலாராக, ஆணுக்கு அடிமையாக, தாய்மைப் பாத்திரமாக, இருந்த நிலையை மாற்றி, சமுதாயத்தில் சகல உரிமைகளும் கிடைக்கவேண்டும் என்ற உணர்வு இந்த நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் உக்கிரம் பெற்றது. இந்த விழிப்புணர்வைத் தூண்டி புதுமைப் பெண்ணை அறிமுகப்படுத்தியவர் ஆண் சீர்திருத்தவாதியான சுப்பிரமணிய பாரதியார் அவர்களே.

அக்காலத்தில் பெண்கள் சிலரும் தமது அடக்கு முறையை இனங்கண்டு அவற்றை மீறி சுதந்திரம் காணமுயன்றபோதும், அக்கால முறைப்படி பெண்கள் கருத்துக்கள், பேச்சுகள் சமூகத்தில் அரங்கேறாதவை. அல்லது சமூகத்தின் கைப்பிடிக்குள் சித்திரவதைப் பட்டார்கள். எனவே இந்தப் பெண்களின் பிரதிநிதியாகப் பாரதியார் சமூகத்தின் முன்னே வந்து நின்றார். இதனால் பாரதியாரும் நிந்தனைக்குள்ளானார் என்பதையும் மறுக்க முடியாது. அவரைத் தொடர்ந்து பல சீர்திருத்தவாதிகள், பெண் புரட்சியாளர் தோன்றி மாதர் உரிமைகளைச் சமுதாயத்தில் முன் வைத்தார்கள்.

காலச்சூழ்நிலைகள் மாற்றமடைய, மக்கள் வாழ்க்கை முறைமைகள் வேறுபட, பெண்கள் மெல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல வெளியுலகுக்கு வரத்தொடங்கினர். தாம் அறிவிற் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிப்பது போல் பெண்கள் பலர் அறிவுத்துறைகளில் முன்னேறினார்கள். இவற்றைக்கண்ட மனித சட்டங்களும் பெண்ணில் விதித்த கட்டுப்பாடுகளைத் தளர்த்திக்கொள்ள முனைந்தது. இவ்வாறு நீதிச் சட்டங்கள் இடம் கொடுத்த போதும் மரபுச் சட்டங்களும், மதச் சட்டங்களும் தமது ஆதிக்கத்தைக் கைவிட மறுக்கின்றன. இதன் காரணமாகப் பெண்ணடிமைப் போக்குகளை அப்புறப்படுத்த முடியாத அளவுக்கு ஸ்திரம் பெற்றுள்ளன. ஆனால் அதன் ஆதிக்கத்தை அப்படியே வளரவிடாமல் பல பெண்கள் தேவையான இடத்து, சாகடித்துவிடத் துணிந்துள்ளனர். ஆங்காங்கே வெற்றியும் கண்டுவிட்டனர்.

இன்று பெண்கள் பல மடங்கு முன்னேறிவிட்டனர் என்று இவ்விடத்தில் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. ஆனால் பாரதியார் கனவு கண்ட பெண்களுக்கு இன்னும் கால அவகாசம் இருக்கிறது என்றுதான் சொல்ல முடியும். பெண்கள் சுதந்திரத்தை முன்னெடுத்து இன்று பரவலாகப் பல நவீன பெண்நிலைவாதிகள் கோஷம் எழுப்பி வருகின்றனர். இவை பெண்ணினத்தின் விழிப்புணர்ச்சிகளுக்குச் சான்று பகர்கின்றன.

பெண்களுக்கு ஆண்களைப் போல் சமுதாயத்தில் சலக உரிமைகளும் உண்டு என்பதை ஆண்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவையற்றுப்போன, நடைமுறையில் நன்மை பயக்காத பண்டை மரபுகளைப் பெண்கள் தவிர்த்துக் கொள்வதற்கு ஆண்கள் ஒத்துழைக்கவேண்டும், அல்லது அவ்வாறு ஒத்துழைக்காவிட்டாலும், பெண் சுதந்திரத்தைக் கொச்சைப் படுத்தாமலிருந்தாலே போதுமான கைமாறு எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ்வு மனப்பான்மை

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்"

என வரகவி பாரதியார். அன்று வீராவேசத்துடன் முழங்கியது ஏன்? வாழ்க்கையின் அடிமட்ட நிலையிலே மிகவும் பிற்போக்கான கட்டுப்பாடுகளின் கெடுபிடிகளிலே சிக்கித் தவிக்கும் பெண்ணினத்தை வெளிச்சத்துக்கு கொண்டுவர முனைந்தார் அவர். இப்படியான பெண்ணொடுக்கு முறைகள் அன்று இருந்திருக்காவிட்டால் பாரதியார் "மாதர் தம்மை உயர்வு செய்யும் மகிமையைப் போற்றுவோம்" என்றல்லவா பாடியிருக்கவேண்டும்! இப்பாவின் அடிகளில் இருந்து பெண்ணினத்தின் அடிமைத்தன்மையையும், அதையுணராத ஆண்களின் அறியாமையையும் இருபதாம் நூற்றாண்டு ஆரம்பகாலத்திலேயே சமூகத்தில் வைத்த பெருமை பாரதியாருக்கே உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாகப் பிறப்பதே பாவம், என்று நினைக்கக் கூடிய அளவுக்கு பெண்குலத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளும், கொடுமைகளும் அளப்பரியது. இதன் காரணமாக பெண்ணைப் பெற்றவர்கள் எவ்வளவோ வேதனைப்பட்டார்கள், வேதனைப் பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். பிறந்தது ஒரு பெண் குழந்தையாக இருந்தால், பெற்றவள் முகத்தில் சோகத்தின் ரேகைகள். இல்லத்தில் துக்கம் கொண்டாடும் நிலைக்கு வந்துவிடுகிறது. பெண் என்றவுடன் அலட்சியம் சமூகத்தில் தொனிக்கின்றது. பெண் குழந்தையா பிறந்துள்ளது? பாவம் அவர்கள் எனச்சிலரும், அவருடைய செருக்குக்குப் பற்றாது, இன்னும் ஐந்து பெண் குழந்தை பிறக்கவேண்டும் என்று வசை பாடுவதும் ஏன்? எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஒரு பெண்ணின் துணையின்றி இயங்காத சமூகம் பெண்ணை இப்படி அலட்சியம் செய்கிறது. ஆண் என்று தம்பட்டம் அடித்துப் பெருமை கொள்வோரும் ஒரு தாய் என்ற பெண்ணின் வயிற்றில் உதித்த பின் பெண்ணை இழிவு படுத்துவது எவ்வளவு அறியாமை. பொதுவாக குடும்ப அமைப்பை நோக்கின் தாய், சகோதரி, மனைவி என்ற நிலைகளில் உள்ள பெண்களின் பாத்திரங்களில் "மனைவி" என்ற பாத்திரம் அதிகப்படியான அடக்கு முறைக்குட்படுகிறது.

பெண்ணினம் இல்லையானால் அதைச் சமூகம் என்று நாமகரணம் சூட்டமுடியுமா? ஆண் என்ற ஒரு இனத்தால் என்ன செய்யமுடியும்? ஆணும் பெண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்ததுதான் உலகம் என்று இயங்கும் போது பெண் பிறந்தால் ஏன் தாழ்வு மனப்பான்மையோ? என ஆராய்ந்தால், தேவையற்ற அறியாமையில் ஊறிய, பழைய வழிவந்த கொள்கைகள்தான் என்று சொல்ல முடியும். இந்தக் கொள்கைகளை முறியடித்துப் பெண் சமத்துவத்தை வழங்க நம் சமூகம் திராணியற்று நிற்கிறது.

பெண் குழந்தை பிறந்ததுமே அவளுக்கு அறிவு வளர வளர பெண் ஆணுக்கு அடிமையானவள், மென்மையானவள், என்ற கருத்து தாய்ப்பாலுடன் ஊட்டப்படுகிறது. சிறுவர்களுடன் சேர்ந்து பழகவும் சிறுமிகளுக்குத் தடை விதிக்கப்பட்டு அவர்களுக்கு என்ற ஒரு வட்டத்தைப் பெற்றோர் அமைத்து விடுகின்றனர். இதற்கும் பெண்ணான ஒரு தாயும் உடன்பட்டு கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில் முன்னிற்கிறாள். எனவே பெண்தான் பெண்ணின் சுதந்திரத்தைப் பொசுக்க ஆரம்பிக்கிறாள்.

அப்படியென்றால் ஏன் பெண்கள் சுதந்திரத்தைக் கோரி நிற்கிறார்கள்? எனக்கேட்கலாம் நியாயமான கேள்வியே. பெண்ணாகப் பிறந்து தான் பட்ட கஷ்டத்தின் காரணமாகவே அந்தத் தாய்மனம் கட்டுப்பாடுகளை, சம்பிரதாயங்களைக் கற்பிக்க விழைகிறது. இதை அடிப்படையாகக் கொண்டே பெண்ணடிமைகள் வளர்ந்து வரக்கூடியதாயுள்ளது. இதனால் பெண் தன்னைப் பலமில்லாதவள் எனக் கருதியமையால், தான் அபலை என்று எண்ணிக் கொள்ளக்கூடிய தன்மையை, அவள் வாழ்கின்ற சூழல் ஏற்படுத்திக் கொடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கலாச்சாரப் பண்பாடுகளின்படி எமது சமுதாயத்தில் பூப்படைந்த சிறுமிகளின் அச்சம், திகைப்பு, மாற்றம் என்பவற்றைப் போக்குவதை விட்டு அவற்றை மேலும் அதிகப்படுத்தும் முறையிலேயே அனுபவம் மிகுந்த மாதர், சுற்றவுள்ள மாதர் நடந்து கொள்கின்றார்கள். போதனை செய்கின்றார்கள். பழமை வாய்ப்பாடுகளை மனனம் செய்யத் தூண்டிவிடுகிறார்கள். மற்றும் சடங்குகள், சம்பிரதாயங்கள், இடக்கரடக்கற் சொற்கள், குழூஉக்குறிச் சொற்கள், கேலிப்பார்வைகள் என்பன பெண்களை மேலும் தலைகுனிய வைக்கின்றன. இன்னும் மாதவிலக்கான நாட்களில் பெண்களை ஒதுக்கிவைத்தல், அந்நேரம் வீட்டுக்கு விரும்பத்தகாதவர்கள் எனப் பறைசாற்றுதல் போன்ற எல்லாம் பூப்படைந்த சிறுமிக்குத் தாழ்வுணர்ச்சியும், மற்றவர் கண் படக்கூடாது என்ற அருவருப்பும் அவளிடம் வேரூன்றிவிட, தாழ்வு மனப்பான்மை அவளிடம் குடியிருக்க ஆரம்பிக்கின்றது.

பருவப் பெண்ணான பின்னர் அவளது உடற்கூற்றமைப்பு, ஒரு நாணத்தை, அறியாமையினால் உருவாகும் மெல்லிய பயத்தை ஏற்படுத்தி விடுகின்றது. பெற்றோரோ அவளின் வளர்ச்சி கண்டு சந்தோஷமும், பெருமையும் கொள்ளவேண்டிய நேரத்தில் மனங்கோணும் பாவனையில் மாறிவிடுகிறார்கள். வெளியில் நடமாடி வர என்ன விபரீதங்கள் நடக்குமோ என்று அஞ்சுகிறார்கள். ஆனால் தமது மகனின் வளர்ச்சி கண்டு பூரிப்படைகிறார்கள். பரந்த மார்புடையோனாக, சிங்கம் நிகர்த்த காளையாக வளர்ந்து நிற்கிறானே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பெருமிதம் கொள்கிறார்கள். வெளியே போய் எங்கும் உலவி எந்நேரமென்றாலும் வீட்டுக்கு வா! என அனுமதி கொடுக்கிறார்கள். ஆனால் இத்தகைய அனுமதி பெண்களுக்கு இல்லையே. ஏன்?

இங்கே பெண்ணுக்கு ஒரு குழிதோண்டல் நடைபெறுகிறது. பெண்களை வெளியில் விட அனுமதிக்காத காரணம் என்ன? பேய், பிசாசு, கொடிய விலங்குகள் அவளைத் தாக்கிவிடும் என்பதாலா? அல்லது வெளியில் போய்வர அவளுக்குப் பாதை தெரியாது என்பதாலா? தமது இனம் எனக்கூறும் ஆணினத்துக்கே அவள் அஞ்சி வீட்டுக்குள்ளே இருக்கின்றாள். சமுதாயத்தில் ஆரோக்கியமான, மனித உரிமைகளை நியாயப்படுத்துகின்ற மாற்றங்கள், ஏற்படாதவிடத்து இந்தநிலை நீடித்துக்கொண்டே போகும்.

மேலெழுந்தவாரியாக நோக்கும் போது ஆண்களே இவற்றுக்கெல்லாம் காரணம் என்ற முடிவை எடுக்கவேண்டியுள்ளது. இதை மனதில் வைத்துக்கொண்டே தாய்மார்கள் "அங்கே போகாதே, வெளியில் போகாதே, தெருவில் நிற்காதே, என்ன அலங்காரம் உனக்கு?" என்று கட்டுப்பாடு போதிக்கின்றார்கள்.

இன்னும் சில குடும்பங்களில் "உன்னை ஒருவன் கையிற் கொடுக்கும் வரைக்கும் எமது வயிற்றில் நெருப்பை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். கவனமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டும்" என்ற அறிவுரைகள் யாவும் யாரை மையமாக வைத்து, பெண்களுக்கு ஊட்டப்படுகிறது? எமது சமுதாயத்தில் எந்தப் பெண்ணாவது துணையின்றி, தனிவழியே அச்சமின்றிப் போகமுடியுமா?

இன்னொரு முக்கிய அம்சம், ஒரு ஆணே இன்னொரு ஆணுக்குப் பயப்படும் நிலை இருக்கும் போது பெண்ணின் நிலை எப்படி இருக்கும்? அதாவது கணவன் தன் மனைவியையோ, சகோதரன் தன் சகோதரியையோ, நோக்கி "நீர் அந்த வழியிலே போகவேண்டாம். அது கூடாத இடம். அங்கே பெரும்பாலும் காடையர்கள், காமுகர்கள், நிற்பார்கள்" என ஒரு ஆணே தன்னினத்தைப் பற்றி அறிமுகம் செய்து வைக்கின்றார்கள். இப்படியான நிலை இருக்கும் போது எமது சமுதாயத்தில் பெண்களுக்கு எங்கே விடிவுவரும்?

இன்று பல பெண்கள் பலதுறைகளிலும் முன்னேறி சமூகத்தில் முன்னிற்கிறார்கள், என்று பரவலாகப் பேசப்படுகின்றது. பெண் சுதந்திரம் கோரிச்சென்ற பாரதியின் புண்ணிய பூமியிலே, பாரதி கனவு கண்ட பெண்ணாக பாரத ரத்னா இந்திரா காந்தி அம்மையார் தோன்றி, புதுமைப் பெண்ணுக்கு ஒரு அத்திவாரம் போட்டுச் சென்றுவிட்டார். இதை வைத்துக்கொண்டு எல்லாப் பெண்களும் சுதந்திரமாக, வாழ்கிறார்கள் எனக்கூற முடியாது. பாரதி கூறிய புரட்சிப்பெண்ணின் கருத்துக்களுக்கமைய, ஆங்காங்கே சில பெண்கள் வாழ்கிறார்கள் என்பதையும் மறுக்கமுடியாது. ஆனால் சமூகத்தின் புரையோடிப் போன மூடக் கொள்கைகளால் அபலைகளாக வாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் தாழ்வு மனப்பான்மை இன்னும் வளர்ந்துகொண்டே போகின்றது. அதற்கு இன்றைய சமூகம் பசளையிட்டு வளர்த்துச் செல்கின்றது. பெண்ணடிமையைச் சட்டங்கள் நீக்கினாலும் சம்பிரதாயங்கள் அவற்றுக்கு இடம் கொடுக்கவில்லை.

சம்பிரதாயங்கள், மாறுவதற்கு ஒவ்வொரு தனிமனிதனின் மனமும் மாற்றமடைய வேண்டும். அந்த மாற்றங்களையும் ஒவ்வொருவனும் மனமுவந்து ஏற்கவேண்டும். ஆகவே சமுதாயத்தின் அடிப்படைகளில் ஊறியுள்ள சம்பிரதாயங்களில் ஏற்புடைத்தான அம்சங்களை விட்டு தேவையற்றன எனக் கருதப் படுவனவற்றைத் தவிர்த்துக் கொள்ளுதல் சாலச் சிறந்தது.

"உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார் நாங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்,
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்."

- பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலம் குறைந்தவர்களா?

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டால் அறிவிலோங்கி வையகம் தழைக்குமாம்"... என்றார் பாரதியார். ஆம் உண்மை. இங்கே கூறப்பட்ட சரிநிகர் சமானம் எங்கு இருக்கவேண்டும்? உடைகளிலா? உடலமைப்பிலா? வெளித்தோற்றத்திலா? சுயநிர்ணய உரிமைகளிலா? என்று சிந்திக்கவேண்டும். அவ்வாறு நோக்கின் பாரதியார் மனத்தில் உதித்து, கவிதையாக வந்த கரு எது? அனைத்து உரிமைகளிலும் அதாவது ஆண்களுக்கு ஒரு சமுதாயத்தில் என்ன உரிமைகள் இருக்கின்றனவோ அதே உரிமைகள் பெண்களுக்கும் இருக்கவேண்டும், என்பதேயாகும். அவ்வாறு உரிமைகள் பெண்களுக்கு இருக்குமேயானால் வையகம் சிறந்து பொலிவுறும்.

சமத்துவம் ஆணுக்குப் பெண் உரிமைகளில் மட்டுமல்ல, அறிவு, திறமை, பலம் போன்றவற்றிலும் சமம் உண்டு. அப்படியின்றி பலவீனர்களாக இருந்தால் பாரதி பெண்களைச் சமநிலைக்குக் கூவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்திருக்கவே மாட்டார். எனவே இங்கு ஆணுக்குப் பெண் எந்தவிதத்திலும் சளைத்தவளல்ல என்ற துணிவு ஏற்படுகிறது. ஆண்களை விட பெண்கள் பலம் குறைந்தவர்களா? என்ற கேள்விக்குரிய விடையை நாம் முதலில் பார்ப்போம்.

"இயற்கையாகவே பெண்ணை மென்மையாகப் படைத்து, படைப்புத் தொழிலுக்கு அவளைத் தேர்ந்தெடுத்துள்ளான் ஆண்டவன்" என்று கூறினும் அங்கே வன்மை தொக்கி நிற்கின்றது. அதாவது ஒரு குழந்தையைப் பத்து மாதங்கள் வயிற்றில் சுமந்து ஈன்றெடுப்பவள்தான் பெண். அவள் கருக்கொண்ட நாளில் இருந்து கரு ஒன்று சிசுவாக வளர எத்தனையோ பல மாற்றங்களால் உடலில் ஏற்படும் வேதனைகளைத் தாங்கிக் கொள்கிறாள். அத்துடன் குடும்பப் பொறுப்புகளையும் நிதானமாகக் கவனிக்கிறாள். இந்த வேதனைகளைச் சாட்டாக வைத்து அவள் உறங்கிக் கிடப்பதில்லையே. பெண் கருத்தரித்து குழந்தையை ஈன்றெடுப்பதற்கு வாய்ப்பாக உடலுறுதியையும், வலுவுள்ள இடுப்பெலும்புகளையும், அவனுக்குப் பிறப்புரிமையாக்கியுள்ளது இயற்கை. பேறு காலத்தின் போது ஏற்படும் அதிர்ச்சி நிறைந்த வேதனையில் அவள் பலமாக நின்று உயிர்களைத் தோற்றுவிக்கிறாள். இவளின் முன்னே ஆண்கள் என ஆண்மை பேசும் இனத்தவரின் பலம் எங்கே?

அன்றாடம் வேலை என்று நாள் முழுவதும் கழித்து விட்டு ஒரு சிறிய தலையிடி என்றவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமே வெறுத்தது போன்றும், அதுவே சுழல்வது போன்றும் ஊரை எழுப்பி ஓலமிடும் ஆண்களின் பலவீனம், சகிப்பு நிறைந்த பெண்ணுக்கு எதிரே நிற்க முடியுமா? இதை நோக்கும் போது ஆண்களை விட பெண்கள் ஒரு படி உயர்வு என்று சொல்லலாமா? என்ற கேள்வி எழுகிறது.

உத்தியோகம் பார்க்கும் (வேலைகள்) ஒரு கணவனுக்கு வேண்டிய சகல தேவைகளையும் பொறுப்புடன் கடமையுணர்ச்சியுடன் மனைவி செய்கின்றாள். வேலைக்குப்போய் அவன் திரும்பி வரும் நேரகாலம் உணர்ந்து அவனுக்கு வேண்டிய உணவு, தேநீர் என்பவற்றைத் தயாரித்து விட்டு அவன் வரவை எதிர்பார்த்து அவனுக்குச் சேவகம் செய்கிறாள். மனைவியின் உபசரிப்பில் கணவன் களைப்பு நீங்கி புத்துணர்வு பெற்றுவிடுகின்றான். சில வேளைகளில் அவனுக்கு வேலை செய்யும் இடத்தில் அல்லது தொழிற் ஸ்தாபனங்களில் பிசகுகள் ஏற்படும்போது மனங்குழம்பி வீடு வருகின்றான். வந்ததும் வராததுமாக அற்ப சில காரணங்களைச் சாட்டாக வைத்து மனைவி மீது சீறிப் பாய்கிறான். ஒன்றுமறியாத துணைவியோ கலங்கி நிற்கிறாள். தனக்கு வேலையிடத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை, கோபங்களைக் கொட்டித்தீர்க்க அவனுக்கு உரிமையான ஜென்மம் மனைவியென்ற அப்பெண்ணே பொறுமையுடன் அவனை அனுசரித்து புரிந்துணர்வுடன் நடந்து கொள்கிறாள். வேலை வேலை என்று அந்த வேலையிலேயே மூழ்கிவிடும் ஆண்களில் இன்று எத்தனைபேர் பிள்ளைகளைப் பராமரிக்கிறார்கள்? எத்தனை பேர் மனைவிக்கு வீட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளில் உதவுவதற்கு முன்னிற்கிறார்கள்? ஆராய்ந்து கணிப்பீடு செய்யவேண்டிய விடயம்.

குடும்பப் பெண்ணானவள் தன் தகுதிக்கு ஏற்ற வகையில் வாழ்க்கைப் பொருளாதாரத் தளம்பல் நிலை கருதி வேலைக்குப் போகின்றாள் என வைத்துக் கொள்வோம். சில காரணங்களால் அவள் கணவனுக்குத் தகுதியான, பொருத்தமான வேலை கிடைக்கவில்லை என்ற எடுகோளின் கீழ் நோக்குவோம். மனைவி வேலைக்குச் செல்லும்போது வீட்டை என்ன நிலையில் வைத்துச் சென்றாளோ அதே நிலைதான் அவள் திரும்பி வரும்போது இருக்கும். அதாவது போட்டது போட்டபடியே இருக்கும். சமையலறை அதோகதிதான். மனைவி வேலை செய்துவிட்டு வருகிறாள், என காலமறிந்து உணவு தயாரித்து அவள் வரவைப் பார்த்துக் காத்திருக்கும் கணவர் மிகச்சொற்பமே.

சிலர் மனைவி வரும் வரைக்கும் அவள் சாப்பாடு கொண்டு வருவாள் என்பது போல் வாளா விருப்பர். அது மட்டுமன்றி சிலவேளை அப்பெண் வேலை செய்யும் இடத்தில் சக ஊழியருடனோ அல்லது உரிமையாளருடனோ பிணக்குகள், ஏற்பட்டுவிட்டால் அவள் அந்த எரிச்சலை கணவன் முன்னே (ஆண்களைப் போல்) காட்டி வீட்டை அமர்க்களப் படுத்துவாளா? இல்லையே. சீறாமல் சினக்காமல், பொறுமையுடன் தனக்குள்ளேயே அதைச் சகித்துக்கொண்டு குடும்ப வாகனத்தை எவ்வளவு லாவகமாக ஓட்டிச் செல்கின்றாள். இந்தப் பெண்களின் குணத்தின் முன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களின் குணம் ஒருபடி உயர்வா? அன்றேல் குறைவா? என்பது சிந்திக்க வேண்டிய விடயமே.

கற்பு என்று பலவாறு எல்லாநிலைகளிலும் எமது சமுதாயத்தில் பேசப்படுகின்றது. அது என்ன? அது யாருக்கு? காதல் மனையாளைக் கைப்பிடித்து இல்லறம் நடத்து! அதற்கு முன்போ, பின்போ வேறொரு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்காதே. இதுதான் ஆண்களுக்குரிய கற்பு. கற்பு நெறியில் உறுதியாய் நின்று தன்னையும் தன் கணவனையும் பேணி எந்தக்காலத்திலும் பிறழாமல் நிற்கவேண்டும். இதுதான் பெண்களுக்குரிய கற்பு. எனவே இந்த கற்பு எனப்படுவது பெண்களுக்கு மட்டுமல்ல. ஆண்களுக்கும்தான் தேவை. கற்பெனப்படுவது பெண்களுக்குத்தான் ஆண்களுக்கு இல்லை என்று திருவள்ளுவரோ பாரதியாரோ எந்த இடத்திலும் கூறவே இல்லை. மாறாக திருவள்ளுவர் ஆண்களின் கற்பு நிலையை நிலைநிறுத்த தமது நூலில் 'பிறனில் விழையாமை' என்ற அதிகாரத்தையே ஆக்கியளித்துள்ளார். பிறனுடைய வீட்டை விரும்பாதே என்பதனை அந்த அதிகாரப்பொருள் என நாம் சுருக்கமாக எடுத்துக் கொள்ளலாம். பிறன் வீட்டில் ஒருவன் போய் விரும்புவது, அங்குள்ள பொருள் பண்டங்களையல்ல. அங்கு வதியும் இல்லாள் ஆகிய பெண்ணைத்தான் பிறன்வீடு என உருவகப்படுத்தியுள்ளார்.

"பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் அன்றோ ஆன்ற ஒழுக்கு." -வள்ளுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்பு நிலை என்று சொல்ல வந்தார்-அதை
ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம்"
- பாரதி.

திருக்குறள் பண்டையிலக்கிய நீதி நூல்களில் ஒன்று. அந்நூலிலேயே ஆண்களின் கற்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் இப்பண்டைய நீதி நூல்களின் படி வாழ வேண்டுமா? எனக்கேட்டு அதை மீற முற்படும்போது, பெண்களைப் பற்றிக் கூறிய நீதி நூல்களின்படி பெண்கள் வாழவேண்டும் என்று அடக்குவது எந்தளவுக்கு நியாயம்? ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதியா? அது ஏன்? யார் அதை உருவாக்கினார்கள்? யாருருடைய நலனுக்காக உருவாக்கினார்கள்? என்ற கேள்விகளுக்கு விடை காணுதல் பெண் சுதந்திரப் பாதைக்கு முதற்படி எனலாம்.

கற்பு என்று சொல்ல வந்தோம், இந்தக் கற்பு இருவருக்கும் அவசியமே. தன் மனைவியைத் தவிர மாற்றான் மனைவியை ஏறெடுத்தும், எண்ணியும் பாராத ஆண்மையுள்ளவனே பேராண்மைக்குரியவனாவான். இந்தக் கருத்துக்கள் எல்லாம் எத்தனை ஆண்மக்களின் மனதைத் தொட்டுள்ளது? மேன்மையான, வாழ்வை வளம்படுத்தும், குடும்பத்தைச் சிறக்கவைக்கும் கற்பு என்ற பண்பை உணராமல் எத்தனையோ பேர் தம் மனச்சாட்சியையும் அடகு வைத்து மிருகத்தனமான காமவேட்கைக்கு ஆளாகின்றனர். இந்த வகை மனிதருக்குப் பயந்து பெண்களைப் பூட்டி வைக்காமல் வேறென்ன செய்யமுடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாத பெண்களுக்கு ஆசையூட்டி, அல்லது அறிந்தும் துணிவில்லாத பெண்களுக்குத் துணிவையூட்டி, ஏமாற்றி, தங்கள் உடற்பசிக்கு இரையாக்கிவிட்டு நடுத்தெருவில் பெண்களை விட்டுச்சென்று வாழும் போலிப்புது மனிதர்கள் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள். இனியும் இருப்பார்கள். மாயச்சூழ்நிலையால், ஆண்களின் வலைவிரிப்பால் பெண் மயங்கிவிட்டால் அங்கே பாதிப்பு. உடல் மாற்றங்கள் ஆண்களுக்கல்லவே. இதை மையமாக வைத்து தம் கண் கால் போனபடி நடக்க ஆண்கள் முனைகிறார்கள். காமமாயப் போர்வையால் ஆட்பட்டு கற்பை ஒருவன் எடுக்க, அதை ஒருத்தி பறிகொடுக்க... எல்லாம் ஏன்? கற்பை இழந்துவிட்டோமே என ஒருபெண் கடலிடமோ, கிணற்றிடமோ, கயிற்றிடமோ தஞ்சம் புகுந்து விடுகின்றாள். ஆனால் அப்பெண்ணின் கற்பைப் பறித்து ருசி பார்த்த காமுகன் மீண்டும் இன்னொரு பெண் சுகம் நாடி அலைகின்றான். என்னை அசைக்கவும் முடியாது என்பது போல் பெண் வேட்டை ஆடுகின்றான். இதுவா ஆண்மை? ஆண்மையின் இலக்கணம் இதுதானா? இதை நடைமுறைச் சமூகமும் ஆதரித்தால் நிச்சயம் பெண்கள் இன்றும் வீட்டுக்குள் பூட்டியிருக்கப்பட வேண்டியவர்களே.

கற்பு என்று பெரிதாகப் பெண்மேல் சுமத்திவிடும் ஆண்கள் தாம் கற்பில் வழுவாமல் நிற்கிறோமா? எனச் சிந்திக்க வேண்டும். கற்பில் தவறிய, அதாவது வேறொரு பெண்ணிடம் தொடர்பு. இருந்து முறிந்த ஆணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிழந்தவனே. இப்படியான ஒருவர் ஒரு பெண்ணிடம், தனக்கு வரப்போகும் பெண்ணிடம், கற்பை எதிர்பார்ப்பது எந்தளவுக்கு நியாயம்?

ஆண்கள் பொறுமையற்றவர்கள், அவர்களின் காமப்பசி காற்றென வீசினால் நாடே அழிந்துவிடும் என்பதினாற்தான் இடத்துக்கு இடம் ஊருக்கு ஊர், அவர்களின் காமப்பசிக்கு இரைபோடும் உணவு விடுதிகள் போல் விபச்சார விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. உலகத்திலேயே மிகத்தொன்மையான தொழிலாக இன்றுவரை இது பரந்து நடைபெற்று வருகின்றதே. இவை பெண்களின் பெயரைக் கெடுக்கவா? அல்லது ஆண்களின் பசியைப்போக்கி மீண்டும் அவர்களை மனிதர்களாக்கி சமுதாயத்தில் உலவவிடவா? எது என உற்றுச் சிந்திக்கவேண்டும்.

பெண்மைக்கு விலை பேசி, வியாபாரப் பொருளாக்கும் துர்ப்பாக்கியநிலை சமூகத்தில் ஏன் ஏற்படுகின்றது? பெண்கள் ஆணின்பம் தேடி அலைவதாக வைத்து அவர்களுக்கென்ற ஆண்கள் விபச்சார நிலையங்கள் ஏதாவது உண்டா? அப்படி இருந்ததாக வரலாறுகள் இல்லை. இத்தன்மைகளை நோக்கும்போது ஆண்கள் ஒருபடி உயர்வா? பெண்கள் தான் உயர்ந்து நிற்கிறார்களா? சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

மறுபக்கத்தினர் (ஆண்கள்) சிலர் இக்கருத்துக்களுக்கு சில காரணங்களைக் காட்டி மறுப்புத் தெரிவிக்கலாம். அதாவது பெண்ணினம் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களில் காசுக்கு காட்சி கொடுப்பதாலேதான் ஆண்கள் அங்கு நாடுகிறார்கள். மேலோட்டமாக நோக்கும்போது இது ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் ஆண்களின் குணமறிந்த சமுதாயம் அவர்களை அனுசரிக்க, மங்கையர் சிலரின் நற்பெயரை வாங்கி விபச்சாரி என்ற பெயரைச் சூட்டி அவர்களை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கிறது. பொதுவாக ஆசிய நாடுகளை நோக்கும் போது நங்கையர் பலர் பொருளாதார அரக்கனின் இம்சைகளைச் சகிக்கமுடியாமல் நிலையங்களிடம் தஞ்சம் புகுகின்றார்கள். இத்தன்மைகளை நாம் இவ்வாறும் மதிப்பிட்டுக் கொள்ளலாம். ஆண்களின் குணம் அறிந்த மங்கையர் சிலர் தம் வாழ்வைப் பாழாக்கி மற்றைய பெண்களுக்கு மதிப்பைக் கொடுக்கிறார்கள். அவர்கள் தாசி, விலைமாதர், விபச்சாரி என்ற பெயர்களுடன் வாழும்போது ஏனைய பெண்கள் பத்தினி, இல்லத்தரசி, குலமாதர் என்ற பெயருடன் வாழக்கூடியதாகவுள்ளது. இந்த நிலையங்கள் சட்டபூர்வமாகவோ மறைமுகமாகவோ இயங்காவிட்டால் வீட்டுக்கு வீடு தாவி விடுவார்கள். வீடுகளே சில வேளைகளில் விடுதியாக மாறிவிடலாம், என்பதினாற்தான் இந்த நிலையங்களை நியாயப்படுத்தவேண்டியுள்ளது.

மேற்கூறிய காரணங்களை வைத்துக்கொண்டு நோக்கின் ஆண்களை விட பெண்கள் ஒரு படி உயர்வு என்று முடிவு கிடைக்கிறது. இதற்கு எதிரான கருத்துக்களும் சாதகமான கருத்துக்களும் உண்டு. ஆனால் உண்மைகளை அந்தந்த இடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புக்கொள்ள வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும்.

பெண்ணினத்தின் இழிநிலைக்கான காரணங்களை ஒவ்வொரு ஆடவரும் அலசித் தேடவேண்டும். நம் சமுதாயம் என்னும் கடலிலே சுழிபுகுந்து அவற்றை எடுத்துக்கொண்டு மேலே வரவேண்டும். காரணகாரியத் தொடர்புகளை இனங்கண்டு வழக்கிழந்த மரபுகளை நீக்கி பெண்ணைச் சம கண்கொண்டு நோக்கவேண்டும். இதை விட்டு நாமும் பெண் சுதந்திரத்தை நாடி நிற்கிறோம் என்று மற்றவர்களுக்குக் காட்டுவதற்காகவும், எங்களுக்கும் பெண் விடுதலை பற்றி தலைப்பில் எழுதத் தெரியும் என தற்புலமையை அம்பலப் படுத்துவதற்காகவும் ஆடவர் சிலர் எழுதிக் கொண்டிருப்பதில் எந்தவித பயனுமே இல்லை. எழுதுவது ஒன்று, செயற்படுவது வேறாக இருப்பது மேலும் பெண்ணினத்துக்கு குழி தோண்டுவதற்கு ஒப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வகைக் குணங்கள் நங்கைக்கு அவசியமா?

தமிழ்ப் பெண்களுக்கே உரித்தான குணங்கள் நான்கு என சங்ககாலம் தொட்டே பெண்ணிலக்கணமாகக் கூறப்பட்டு வலியுறுத்தப்படுகின்றது. காரணம் அன்றைய அரசியற் பொருளாதார, சமுதாயம், சமய, சூழ்நிலைகளே எனலாம். இக்குணங்கள் பெண்களுக்கு அவசியம் என்று கூறி இலக்கணம் வகுத்தோரும், ஆதரித்தோரும் பெண்ணடிமைக்கு இதை ஓர் ஆயுதமாகக் கடைப்பிடித்தனர், என்று பின்னெழுந்த பெண் விடுதலை எழுத்தாளர்கள், புரட்சிக்கொள்கை உடைய சீர்திருத்தவாதிகள் கூறியுள்ளனர்.

இன்று நாம் சங்ககாலத்தையும் தாண்டி, ஏன் ஐரோப்பியர் காலத்தையும் கடந்து, உதய சூரியனாம் மகாகவி பாரதியார் காலத்தையும் தாண்டிக்கொண்டிருக்கிறோம். காலச்சூழ்நிலைகள், சகலதுறைச் சூழ்நிலைகள் மாற்றமடைந்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் பெண்களுக்கு உரிய குணங்கள் என வகுக்கப்பட்ட அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இக்காலத்திலும் அவசியமா? என்ற கேள்வி உதயமாகிறது. அவசியமான சிற்சில இடங்களில் மட்டுமே கடைப்பிடிக்கப்பட வேண்டியதொன்று என அதனைச் சுருக்கி வழுத்தமுடியும்.

இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், அதாவது இரண்டாம் நூற்றாண்டுக் காலகட்டத்தில் வாழ்ந்த ஔவையார் காலத்திலும் இப்பண்பு கடைப்பிடிக்கப்பட்டு பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். பெண் அடக்கு முறைக்காக பெண்ணுக்குரிய சட்டங்கள், சாத்திரங்கள், இலக்கணங்கள் எனப்பல விதிமுறைகளை உருவாக்கினர். இவற்றை ஔவையாரும் அனுபவித்து வாழ்ந்தவர்தான். அதுவும் இளம் பெண்களுக்கே பலதரப்பட்ட ஒடுக்கு முறைகள், விதிக்கப்பட்டு வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்கவேண்டும் எனச்சட்டங்கள் விதித்தனர் எம் முன்னோர்கள்.

அக்காலத்திலேயே ஔவையார் ஒரு எழுச்சிப் பெண்ணாகத் தோன்றி பெண் சமுதாயத்தைச் சீர்திருத்த முயன்றபோதும் அக்காலச் சமுதாயக் கட்டுப்பாட்டை அவரால் மீறமுடியவில்லை. தனது எண்ணப்படி தன் கருத்துக்களைச் சில இடங்களில் வெளியிட முடியவில்லை. பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டு மனங்கொதித்து, தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு, தமது இளமைக்கோலம் தடையென்று உணர்ந்து விநாயகப் பெருமானிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரந்து வயோதிப வடிவத்தைப் பெற்றுக்கொண்டார் என இதிகாச புராண வரலாறுகள் கூறுகின்றன. இந்தக் கிழவியாகிய ஔவையார் முருகப் பெருமானிடம் சுட்டபழம் சாப்பிட்டு விட்டு, முருகனின் வேண்டுகோளுக்கிணங்க அவனைப்பற்றிப் பாடும்போது "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது, அதனினும் அரிது பேடு நீங்கிப் பிறத்தல் அரிது..." என்று இரண்டாம் நூற்றாண்டிலேயே வேண்டிக்கேட்டார். இங்கே "பேடு" என்றால் என்ன? பேடு நீங்கிப் பிறத்தல் அரிது என்றால் என்ன? பேடு என்பது பெடை, அதாவது பெண்ணினம். பெண்ணாகப் பிறக்காது விடுதலை அரியது என்றார். இந்த வரலாறு அக்காலத்துப் பெண்ணடிமைத் தனத்தின் கொடுமைகளை உணர்த்துகின்றதல்லவா?

இன்று நாம் ஔவையார் காலத்திலா வாழ்கிறோம்? எத்தனையோ பெண்கள் விஞ்ஞான நிபுணர்களாகக் கடமையாற்றும் இக்காலத்தில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்கள் இருந்து அவர்களை அடக்கமுடியுமா? அச்சம் என்பது பயந்த தன்மை. ஆனால் இந்த அச்சம் இருந்திருந்தால் அல்லது அதைக்கடைப் பிடித்திருந்தால் விண்வெளிப் பெண்மணி வலன்டினா தெரஸ்கோவா விண்வெளியை நினைத்துப் பார்த்திருப்பாளா? இந்தியாவின் முதற்பெண் விண்வெளி நீச்சல் வீராங்கனை ரச்சேல் தோமாஸ் உலகின் பல பாகங்களிலும் விண்வெளி பாய்ச்சல் செய்து காட்டியுள்ளார். ஏன் இவ்வளவு உதாரணங்கள்? அச்சம், மடம் இருந்திருந்தால் இந்த அகில இந்தியாவையே இந்திராகாந்தி அம்மையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி ஆண்டிருப்பாரா? இவற்றைவிட இஸ்ரவேல் பிரதமராக திருமதி. கோல்டா மேயர், இலங்கை முன்னாள் பிரதமர் திருமதி. ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா, தற்போது இங்கிலாந்தில் மார்க்கிரெட் தட்சர்... எனப்பல பெண்கள் அரசியலில், வரலாற்றில் முன்னிற்கிறார்கள். இவர்கள் நால்வகை இலக்கணத்தைக் கடைப்பிடித்து நான்கு சுவருக்குள் இருந்திருந்தால் பெண்கள் இன்று அரசியல், விஞ்ஞானம், வைத்தியம், விளையாட்டு உட்பட்ட பல துறைகளில் முன்னுக்கு வந்திருப்பார்களா? என்பது சிந்திக்கவேண்டிய விடயமே.

அன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு நால்வகைக் குணங்கள் மிக அத்தியாவசியமாக இருந்தன. தாய்மார்கள் பெண்ணைக் குழந்தையிலிருந்தே அவர்களுக்கு ஒவ்வொரு இலக்கணமாகக் கூறி, அவர்களை அடிமைப்படுத்தி வீட்டுக்குள்ளேயே வைத்திருந்தார்கள். அக்கால அரசியற் சூழ்நிலைகளின் பிரகாரம் இளம் பெண்கள் வெளியே தலைநீட்டினால், போரில் ஈடுபட்ட போர் வீரர்கள், மன்னர்கள் அப்பெண்களைக் கவர்ந்து சென்ற வரலாறுகளும் உண்டு. இதனால் பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டி வைக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. நடைமுறை வரலாற்றில், நமது தாய்நாட்டு விடுதலைப் போராட்டத்தில் இந்திய சிப்பாய் படைகளுக்குப் பயந்து இளம் பெண்கள் வீடுகளில் பதுங்கிப் பாய்ந்து வாழ்கிறார்கள். இதற்கு மாறாக இன்றைய காலத்தின் வளர்ச்சியினால் பெண் விடுதலை கோரிய புரட்சிப் பெண்கள் அரசியல் விடுதலைகோரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கி தூக்கி, போராட்டத்தில் ஈடுபட்டு களத்தில் நிற்கிறார்களே. இவர்கள் பெண்கள் இல்லையா? அச்சம் இருந்திருந்தால் இம்மக்களுக்காக, துப்பாக்கி ஏந்தியிருப்பார்களா?

இதே போல் வீரத்தாய் என வர்ணிக்கப்படும் பெண் அன்றொரு நாள் தனது நாட்டு விடுதலைப் போருக்காகப் போராடித் தனது கணவன் இறந்த துயரையும் தாங்கிக்கொண்டு, பால் மணம் மாறாத ஒரே பாலகனைப் போருக்கு அனுப்பி வைக்கின்றாள். பின் மகன் போரில் இறந்த செய்தி கேட்டும் அழுகையை வென்று அச்சம், மடம், நாணம், பயிர்ப்பின்றி போர்க்களத்திற்குப் போய் தனது மகன் மார்பில் அம்பு பட்டு இறந்தானா? முதுகில் அம்பு பட்டு இறந்தானா? எனப்பார்த்து மார்பிலே அம்பு துளைத்து இறந்தது கண்டு, மகனைப் பெற்ற இன்பத்திலும் கூடிய இன்பம் பெறுகிறாள். இவளும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்புக்கு அடங்கி வாழ்ந்தவள்தான். ஆனால் இங்கே அவை வலுவற்றுப் போய்விட்டன. அதாவது எல்லா இடங்களிலும் தேவையற்றன போல் மாறிவிட்டன.

நால்வகைக் குணங்களைக் காட்டிப் பெண்களை அடக்கும் முறை கண்டு பாரதி மனங்கொதித்தார். "கண்ணம்மா என் காதலி" என்ற பகுதியில் "சாத்திரம் பேசுகின்றாய் கண்ணம்மா, சாத்திரம் ஏதுக்கடி" என்றும், "புதுமைப்பெண்" தலைப்பின் கீழ் "நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம், ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்" என்றும் பெண்ணின் இலக்கணத்தைத் தெளிவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தியுள்ளார். மேற்கூறிய கவிக்கூற்றுகளிலிருந்து பெண்களுக்கு நால்வகைக் குணங்கள் அவசியமில்லை என்பது தெளிவாகின்றது. இவ்வாறாக பாரதி எழுச்சிப் பெண்ணை அழைத்துவிட்டுச் சென்ற பின்பும் சங்ககாலப் பெண்டிர் போல் வாழ்தல் முறையெனக் கூறமுடியுமா? பாரதி காலத்தை விட இன்று பெண்கள் ஒருபடி உயர்ந்து விட்டார்கள், என்று சொல்லமுடியும். முற்றாகவல்ல என்பதை மறந்து விடக் கூடாது. சமுதாயத்தில் பல இறுக்கமான பிடிகள் இருந்தும் அவற்றை மருவியனவாக இன்று பெண் சமுதாயம் பழமைக்கும் புதுமைக்கும் இடையில் நிற்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

இந்நிலையில் பெண் சுதந்திரம் விரும்பும் ஆடவர்குழாம் பெண்ணுக்கு, கைகொடுத்து அவளைப் புதுமைப்பாதைக்கு அழைத்துச் செல்லாமல் பழமைப் பாதைக்கே போவென, சில வேளைகளில் சைகை காட்டுவதான நிலைகளும் இன்றைய சமுதாயத்தில் உண்டு. இவை ஆண்களின் தலைக்கனம், அடிமைகொள்ளும் மோகம் என்பன போற்தான் தெரிகின்றது. பெண்களுக்கு நாற்குணங்கள் சந்தர்ப்ப சூழ்நிலையறிந்து தொழிற்பட வேண்டுமேயன்றி கண்டநேரமெல்லாம் கழுத்திற் கட்டிக்கொண்டு திரியவேண்டும் என்பதில்லை. அவ்வாறு சென்றவிடமெல்லாம் அவசியம் என்பதும் இல்லை.

கருத்தொருமித்த இல்லறத்தில் கணவனுக்கு முன்னே, தான் விரும்பிய காதலனுக்கு முன்னே ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு அவளை அடிமை கொள்ளும் போது அங்கே அன்பு நிலை வளர்ச்சியடைகிறது. காதலால் மனைவி கணவன் முன்னே நாணி நிற்கும் நிலையையே கணவன் கண்டு களிப்பெய்துவான். அங்கே கூடலுக்கும் உரமிடப்படுகிறது. அதற்காக அப்பெண் வெளியிடங்களில் போய்வரும் போது ஆடவரைக் கண்டு அச்சம் நாணத்தால், அவள் நாணிக்கோணி நின்றாளேயானால் அவ்வாடவர் இவள் என்ன என்னைப் பார்த்து நாணம் அடைகின்றாள், இவளென்ன விலைமாதுச் சரக்கோ? என்று எண்ணிவிடும் துர்ப்பாக்கிய காலகட்டத்தில் வாழ்கின்ற போது இந்த இடத்தில் அச்சம், நாணம் தேவையா?

மடம் என்பது பேதமை அல்லது அறிவீனம் ஆகும். இந்தப் பேதமை பெண்களுக்கு உண்டு என்றால் மேரிகியூரி அம்மையார் விஞ்ஞானப் புகழ் பெற்றிருப்பாரா? எனவே பேதமை பெண்களுக்குரியது என்பது வறட்டு மொழி எனலாம். பேதமை என்பது இருபாலருக்கும், சில சூழ்நிலைகளின் ஆக்கிரமிப்பால் மூளை மழுங்கடிக்கப்பட்டு அறிவீனம் ஏற்படுவதுண்டே. எனவே அறிவீனம் பெண்களுக்குத்தான் உண்டு எனச்சொல்ல முடியாது. அறிவு, அறியாமை என்பது ஒவ்வொருவரின் ஆற்றலைப் பொறுத்ததேயன்றி ஆண் பெண் என்ற இனங்களைப் பொறுத்ததன்று.

பயிர்ப்பு என்பது அருவருப்பு அல்லது ஏதாவது புதியனவற்றைத் திடீரெனக் கண்டு பின்வாங்கும் இயல்பு ஆகும். அத்துடன் தன் கணவனெல்லாத பிற ஆடவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பரிசத்தால் (குடும்ப உறுப்பினரல்லாத) ஏற்படும் கூச்சநிலை எனலாம். இத்தகைய பயிர்ப்பைப் பெண் எந்நேரமும் உணர்ந்து விலகிநிற்கும் நிலை இன்று அருகி வருகின்றது. காரணம் காலச்சக்கரத்தின் சுழற்சியும், விஞ்ஞான வளர்ச்சியும், அவற்றில் பெண்களின் ஈடுபாடும் எனலாம். உதாரணமாக நமது சமுதாயத்தில் ஒரு இளம்பெண் வைத்தியராகக் கடமையாற்றுகிறாள் என வைத்துக்கொள்வோம். அங்கே ஒரு நோயாளிக்கு உடனடியாக சத்திர சிகிச்சை செய்யவேண்டிய தேவை ஏற்படுகின்றது. அதற்கான உபகரணங்களை எடுத்துத் தருபவரும், அவளுக்கு உதவியாக ஆண் வைத்தியருமாக ஆண்களே அவளுக்கு அருகில் நிற்கின்றனர். சத்திர சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. அப்பெண் வைத்தியர் துரிதமாக, நிதானமாக, சிகிச்சை செய்யும்போது அருகில் நின்ற ஆண் வைத்தியரின் கைகள், உடல் கூட உராய்ந்து விடுகிறது. இந்த இடத்தில் "பயிர்ப்பு" என்று ஐயோ! பிற ஆடவருடல் என்னில் பட்டுவிட்டதே, எனக்கு ஏதோ அருவருப்பாக இருக்கிறதே, என்று நாணிக்கோணி பயிர்ப்புடன் ஒதுங்கிவிடலாமா? அல்லது அந்நேரத்தில் அவள் அப்படி உணர்வாளா? இல்லையே. அவளது உணர்வுகள், நினைவுகள், நோயாளியின் மேல் இருக்கும். நோயாளியின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வுதான் மேலோங்கி நிற்குமே தவிர அவ்வாடவரைப் பற்றி எண்ணியிருக்கவே மாட்டாள். இங்கே பயிர்ப்பு அவசியம்தானா?

வழக்கறிஞராக ஒரு பெண் நீதிமன்றத்துக்கு வந்துள்ளாள். அதுவும் ஒரு கன்னிப்பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கொள்வோம். நீதியரசர், ஆண் வக்கீல்கள், அவளைச் சுற்றி வாதாடுவதற்காக, கறுப்புக் கோட்டுடன் இருக்கின்றார்கள். அவள் அவர்களைக் கண்டு அச்சம், மடம் என்று பின்வாங்குவாளா? அல்லது தனக்குக் கிடைத்த ஆதாரங்களை வைத்து வாதிப்பாளா? அச்சம், மடம் என்று அந்தப் பண்புகளைக் கொண்டிருந்தால், வழக்கறிஞருக்குப் படித்திருப்பாளா? வாதாட வந்திருப்பாளா? அல்லது நால்வகைக் குணத்தின் உந்துதலினால் வாதங்களை ஏனோ தானோ என்று சுருக்கமாகக் கூறிவிட்டு நீதிமன்றத்தை விட்டு வெளியேறி விடுவாளா? மாறாக இவை யாவும் நீங்கப் பெற்றவளாக ஆண்களுக்குச் சமமாக நின்று வாதாடி வெற்றியும் காண்கிறாள். இங்கே இந்த நான்வகைப் பண்புகளையும் கடைப்பிடித்துக் கொண்டிருந்தால் அப்பெண் வழக்கறிஞரின் நிலை? நீதி வழங்குபவரும் நால்வகைக் குணங்களைக் கடைப்பிடிக்கும் பெண்ணாக இருந்தால் அந்நீதியின் முடிவுகள் எப்படியிருக்கும்? உங்கள் சிந்தனையைச் சுழலவிடுங்கள். இவ்வாறாக இன்றைய சூழ்நிலையில் இக்குணங்கள் ஒட்டிக்கொள்ளத்தான் வேண்டுமா? அல்லது அவை எல்லா நிலைகளிலும் அவசியப்படுகின்றதா?

மேற்கூறிய வைத்தியர், வழக்கறிஞர், நீதியரசர், மூவரும் பெண்களாக இருக்கின்றார்கள். இவர்கள் தமது அன்புக் கணவர் முன்னே, காதலன் முன்னே, இல்லற இன்பத்திலே இந்த நாற்பண்பும் கொண்ட குலமாதராகி குடும்பம் சிறக்க வைப்பர் என்பதில் ஐயமில்லை. கணவன் முன்னே மனைவி வழக்கறிஞராக விவாதித்துக் கொண்டிருந்தால் வைத்தியர் தனது சேவையையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக்கொண்டிருந்தால், வீடு நீதிமன்றமாகவும், வைத்தியசாலையாகவும் மாறிவிடும். எனவே அங்கே பெண்ணானவள் தனது அதிகாரங்கள், பதவிகள் யாவற்றையும் இழந்து அன்புக்கணவன் முன்னே பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாகி விடுகிறாள். இதுதான் உண்மை.

ஒரு பெண் தன்னையும் தன் கணவனையும் காத்து கற்பு நெறியினின்றும் சற்றேனும் விலகாது, மாதர் குல மாணிக்கமாகத் திகழ்ந்தால் அங்கே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, யாவும் வலுவின்றிப் பதுங்கிவிடுகின்றனவே. இதே போற்தான் வக்கீலாகக் கர்ச்சித்த இளமங்கை தன் காதலனையோ, அன்றிக் கணவனையோ கண்டதும் நாணிக்கோணி அடக்கத்துடன் ஒன்றுமறியாத சில பெண்ணின் நிலையை யொத்தவளாகிறாள். அந்த இடத்தில் அவள் நாணத்தை அக்காதலன் இரசிக்கிறான். ஆனால் இந்த நாணத்தை நீதிமன்றத்தில் காட்டமுடியுமா? சிந்தித்துப் பார்க்கவேண்டிய விடயமே.

இன்று எம்மினப் பெண்கள் பலர் தாய்நாட்டை விட்டுப் பறந்து வந்துவிட்டோம். சில பெண்கள் தமது கணவருடன் பாதுகாப்பாக சிரமமின்றி வந்து சேர்ந்துவிட்டார்கள். மணமாகாத கன்னிப்பெண்கள், சிறுமிகள் தாமே தனிமையாக வந்துள்ளனர். வந்துகொண்டும் இருக்கிறார்கள். இவர்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று வீட்டுக்குள்ளே இருக்கவேண்டும் என்று எண்ணம் கொண்டவர்களாக இருந்தால் இங்கு வெளிநாடுகள் என்று வந்திருக்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. எத்தனையோ கன்னிப்பெண்கள் எம்மினத்தவனையே, அவன் அந்நிய ஆடவனாக இருந்தாலும், சகோதரனாக மதித்து அவனிடம் உதவிகள் பெற்று, சில வேளைகளில் ஒரேயிருக்கையில் விமானமேறி வெளிநாடு வருகிறார்கள். அந்த ஆண்களும் தம்மினச் சகோதரி என்று தாராளமாக உதவி செய்திருக்கிறார்கள். இவ்விடத்தில் அவள் பயிர்ப்பு என்றும், அது எமது பண்பு என்றும் ஒதுங்கி விட முடியமா? ஒதுங்கிவிட்டால் திரும்ப வீட்டிற்கே போகவேண்டும். இவர்கள் நால்வகைப் பண்புகளும் அவசியம் என்று வாழ்ந்திருந்தால், ஒரு போதும் வீடு தாண்டி, நாடு தாண்டி வேற்று நாடுகளுக்கு வந்திருக்கவே முடியாது. அப்படியென்றால் அவர்கள் அக்குணங்கள் அற்றவர்களா? இல்லவே இல்லை. தேவையானபோது, தேவையான இடத்து அந்த நால்வகை அம்புகளையும் பிரயோகிக்கும் அவசியம் அவளுக்குத்தெரியும். உதாரணமாக ஒரு காமுகன் முன்னே இப்பண்புகளுடன் போக முடியுமா? இங்கே அவை உடைத்தெறியப்பட்டு கண்ணகி போல் மாறவேண்டும். இவ்வியல்பு இயற்கையாகவே அமையுமொன்றாகும். பெண்களின் நால்வகைக் குணங்கள் என்பது பழைய கட்டுப்பாடுகளில் ஒன்று. அவை ஒன்று வெளிப்படையாக இருக்கவேண்டும் என்பதல்ல. தேவையானபோது அவை கடைப்பிடிக்க வேண்டியதொன்று, அத்துடன் ஒவ்வொரு பெண்ணின் மனோநிலையை, தற்துணிவை, பொறுத்ததாகும்.

எழுச்சிப்பெண் தன்னிலையினின்றும் வழுவாமல் கற்பெனும் திண்மை உண்டாகப் பெற்றபின் அவளிடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வகைக் குணங்கள் தோற்றுவிடுகின்றன. மேலும் காலமறிந்து, கருத்தறிந்து, சூழலறிந்து நால்வகைக் குணங்களே நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பம் ஒரு பெண்ணுக்கே புரியும். இவற்றை வைத்து பெண்களை ஆண்கள் அடக்கமுயல்வதுதான் விசித்திரம். ஒரு பெண்ணின் மனோநிலை அவளுக்கே புரியும். மற்றவர்கள் கூறி இப்பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில்லை. ஒரு பெண்ணின் இயல்பு, இந்தக் குணங்களின் உணர்வுத் தூண்டுதல்கள், மனத்தன்மைகள், கடைப்பிடிக்க வேண்டிய தேவைகள் அப்பெண்ணுக்கே புரியும். இதுவே இன்றைய காலகட்டத்தின், பாரதி நூற்றாண்டின் இறுதிக்கால முடிவுகள் எனக்கூறின் பொருத்தமுடையதாகும்.

*"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*
*நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,*
*திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்."*

*- பாரதியார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே உன் கதி?

நமது சமுதாயத்தில் ஒரு பெண்ணுக்குள்ள அதிகாரங்கள் பூரணத்துவம் அற்றவை, அடக்கு முறைக்குட்பட்டவை எனக்கண்டோம். இனி ஒரு குடும்பத்தில் பெண்ணுக்குள்ள அதிகார நிலைமை எப்படியுள்ளது என நோக்குவோம். திருமணத்தின் பின் ஒரு பெண்ணுக்கு குடும்பத்தில் இந்த அதிகாரப் பங்கீடு பிரச்சினையையே கொடுக்கின்றது. பொதுவாக எல்லாக் குடும்பங்களிலும் கணவனே தலைமைப் பொறுப்பு ஏற்றுள்ளார். இது எமது சமுதாயம் அமைத்துவிட்ட ஒரு மரபு. இப்போது இது கொஞ்சம் கொஞ்சமாக மாறி, ஒரு வித சகிப்புத்தன்மை நிலவி இருவருக்கும் இடையில் அதிகாரம் பங்கிடப்படுகிறது. ஆனால் கணவனும் மனைவியும் சம அளவு அதிகாரம் பெற்றிருத்தல் எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை முடியாத காரியமாகும். சமூக மட்டத்தில் பெண்ணுக்கு, சம வுரிமைகள், சந்தர்ப்பங்கள், முன்னுரிமைகள் கிடைக்காதவரை மனைவி கணவனுக்கு நிகராக முடிவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடைந்த நாடுகளில் கணவனைப்போல சம எண்ணிக்கையில் தீர்மானங்கள் மனைவியாலும் நிறைவேற்றப்படுகின்றன. இருந்தாலும் அங்கே ஒரு கணவன் எடுக்கும் முடிவுகள், முழுக்குடும்பத்தையும் கட்டுப்படுத்தும் சக்தியுள்ளவையாக இருக்கின்றன. மேலும் எமது நாடுகளில் பல இடங்களில் கணவனுக்கே சர்வ அதிகாரங்களும் உண்டு. அவற்றைப் பெண்கள் பகிர்ந்து கொள்ளவோ, மீறவோ முன்னிற்பதில்லை. அந்த எண்ணம் எழ முடியாத அளவுக்கு, சமுதாயம் அவர்கள் உச்சந்தலையில் அடித்து அமிழ்த்திவிட்டது.

நடுத்தரக் குடும்பங்களில், சில இடங்களில் மனைவியின் கல்வித்தரத்துக்கு ஏற்ப, உத்தியோக அந்தஸ்திற்கு ஏற்ப மனைவியரும் கணவனுக்கு நிகராக சில அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றனர். மனைவி அதிகம் படித்தவளாகவும், வேலை பார்ப்பவளாகவும் இருந்தால் கணவன் அவளது அபிப்ராயத்துக்கு மதிப்புக் கொடுக்கிறான். சில விசயங்களைத் தீர்மானிக்கும் உரிமையையும் அவளுக்கு வழங்குகிறான். தன்னைவிட அதிகம் படித்தவளாகவோ, அதிகம் சம்பாதிப்பவளாகவோ இருந்தால் அவளது கருத்துக்களுக்கு மதிப்பளித்து, அவள் ஆலோசனையையும் கேட்கின்றான். பெண்ணின் கல்வித் தரத்தைப் போல அவளது உத்தியோகமும், அதிகாரப் பங்கீட்டை நிச்சயம் நிர்ணயிப்பதாகவும், சொல்ல முடியாது. அது அந்தந்த ஆடவர்களின் மனோபாவத்தைப் பொருத்துத்தான் அமையும்.

கணவனின் கல்வித்தரம், அதனால் ஏற்படும் வாழ்க்கை அனுபவங்களின் தெளிவு என்பன உயர,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவிக்குச் சமவுரிமைகளும், சலுகைகளும் வழங்கும் தன்மையும் சில குடும்பங்களில் உண்டு. இருவருமே நன்கு படித்தவர்களாக இருப்பின் அதிகாரப் பங்கீடு ஒரு பிரச்சினையையும் அவ்வளவுக்கு ஏற்படுத்தாது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் சமாளித்துக் கொள்ளும் பரஸ்பர ஒற்றுமை அங்கே உருவாகின்றது. பொதுவாக கற்றவர்களின் எண்ணிக்கை குறைந்த சதவீதமே இருக்கின்றது. அத்துடன் கணவனும் மனைவியும் அப்படிக் கற்றவர்களாக இருப்பதும் மிகக் குறைவெனலாம். மேலும் இவ்வாறான கணவன் மனைவிக்கிடையேயான சமரச ஒற்றுமை, சீர்திருத்த அபிப்பிராயங்கள் அவ்வளவு எளிதில் எல்லாக் குடும்பங்களிலும் ஏற்பட்டு விடுவதில்லை.

கல்வி, வேலை தவிர இன்னொரு விடயமும் குடும்ப அதிகாரத்தில் முக்கிய இடத்தைப் படித்துக்கொள்கிறது. அதுதான் கணவன் மனைவியினிடையே இருக்கும் அன்பும், பிணைப்பும், பரஸ்பர நம்பிக்கையும் அதிகாரத்தைச் சமநிலைப் படுத்தும் சாதன்ங்கள் எனலாம். கணவன் மனைவியை நன்கு நேசிப்பானாயின், நம்பிக்கை வைப்பானாயின் அவனையறியாமலேயே அவளுக்கு அதிக செல்வாக்கும், அதிகாரமும், உரிமைகளும் அங்கே வழங்கப்படுகின்றன. பொதுவாக இவை எல்லா நாடுகளிலும், எல்லாக் குடும்பங்களிலும் காணப்படும் அம்சம் எனலாம்.

பண்பாட்டு, சமூக அதிகாரப் பங்கீட்டுக்களுக்கு உதவுவது வேலைப்பங்கீடு. மத, தார்மீக, விஞ்ஞானக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகள் வெளி வேலைகளைக் கணவனுக்கும், வீட்டு வேலைகள், குழந்தைப் பராமரிப்பு சமையல் வேலைகளை மனைவிக்கும் ஒதுக்கியிருக்கின்றன. இதனால் பெண்கள் வீட்டுப்பணிகளையே முக்கியமாகச் செய்ய வேண்டியுள்ளது. இவற்றுடன், தற்காலத்தில் பெண்கள் வெளி வேலைகளையும் செய்ய முன்வந்துள்ளனர். அவர்களுக்கு சூழல் அறிந்து ஆண்கள் பங்களிப்புச் செய்கிறார்களா? மிகமிகக் குறைந்த அளவினரே உதவிவருகின்றனர். அதுவும் நிச்சயமாகச் செய்வார்கள் எனவும் கூறமுடியாது. அது அவர்களின் அவ்வப்போதுள்ள மனநிலையைப் பொறுத்தது. வீட்டுவேலைகள், சமையல், வீட்டுச்சுத்தம், துணிதுவைத்தல், குழந்தை வளர்ப்பு என்பன பெண்ணின் பணிகளாகவே, சிறுவயது முதல் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

வேலைக்குப் போகும் பெண்ணின் நிலை மிகவும் கஷ்டமானது. வேலையிலிருந்து திரும்பி வந்ததும் கணவன் ஓய்வு எடுத்துக் கொள்ளும்போது, மனைவி மீண்டும் வீட்டு வேலைகளில் பம்பரமாகச் சுழல்கிறார். இவ்வாறு பார்க்கும் போது வேலைபார்க்கும் பெண்களைவிட ஆண்களுக்கு ஓய்வு அதிகம் எனலாம். வேலை பார்க்கும் பெண்களுக்கு விடுமுறை நாட்களும் வீட்டு வேலைகளிலேயே முடிவடைகின்றது. ஒவ்வொரு கிழமையிலும் தேக்கி வைக்கப்பட்ட வேலைகள் அவளுக்காகக் காத்திருக்கின்றன. இங்கே உதவிக்கு என்று ஆள் வைத்திருந்தாலும் அவளுக்கு என்று பல வேலைகள் தேங்காமல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடும்பப்பெண் வேலைபார்க்கும் வீடுகளில் மற்றைய பெண்களின் இல்லங்களை விட ஒரு வித்தியாசம் கட்டாயம் இருக்கும். வேலைக்குச் செல்லும் பெண் "வீட்டு வேலைகளைச் செய்தாக வேண்டுமே" என்ற நோக்குடன் செய்கின்றாள். ஆனால் நாள் முழுவதும் வீட்டில் இருக்கும் பெண்கள் வீட்டு வேலைகளைத் தமது முக்கிய வேலை என்று அழகாக, பொறுமையாகச் செய்து முடிப்பார்கள். மேலும் வீட்டுவேலைகளைச் செய்வதற்கும் நவீன சாதனங்கள் அறிமுகப்படுத்தப் பட்டபோதும், பெண்களுக்கு வீட்டுவேலைகள் குறைந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. எனவே பெண்களுக்கு வேலைப்பளு அதிகம் என்றே கூறலாம்.

நாகரீகமும், கல்வியறிவும், சமூகத்தில் பெண்களின் அந்தஸ்தும் வளர வளர உலகெங்கும் குடும்ப அமைப்புகளில் கணிசமான மாறுதல்கள் ஏற்பட்டுவருகின்றன. எதிர்காலச் சந்ததியினரின் நலன்கள் ஒரு தாயின் கையில்தான் இருக்கிறது. மேலும் மகளிர் கல்வியறிவில் குறைந்தவராகவும், குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்பவர்களாகவும் இருக்கும் வரை, சமுதாய மாற்றங்கள் ஏற்படாதிருக்கும்வரை, சமூகம் அவர்களை அடிமைப்படுத்துவதைப் பொறுத்துக் கொள்ளும்வரை, பெண்களின் அந்தஸ்து உயரப்போவதில்லை. இதன் வழி உருவாகும் சந்ததியினரும் இந்தப் பிடிகளிலிருந்து தப்புவது எங்ஙனம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அளவான குடும்பம் தெவிட்டாத இன்பம்" என்பதை உலகின் எல்லாப் பகுதிகளிலும் புரிந்துகொண்டு விட்டார்கள். பெரும்பாலான நகர்ப்புற, வசதிபடைத்த குடும்பங்களில் குறைந்த எண்ணிக்கை அங்கத்தவர்களைக் கொண்டுள்ளன. கணவன், மனைவி, ஓரிரு குழந்தைகள் மட்டுமே உள்ள சிறிய குடும்பம் **(Nuclear Family)** எனப்படும். இம்மாதிரிக் குடும்பங்கள் நகரங்களில் மிகுந்து காணப்பட்டாலும், கிராமங்களிலும் இப்போது பெருகி வருவதைக் காணலாம். இவற்றுக்குக் காரணம் விஞ்ஞானவளர்ச்சியும், அறிவுப்பெருக்கும், அதன் வழியான பொருளியல் முன்னேற்றங்களும் என்றால் மிகையாகாது. "எங்கள் குடும்பம் பெரியது என்றும் சமர்த்தர்கள், படைக்கு அஞ்சோம்," என்று பெருமைப்பட்ட காலம் மலையேறிவிட்டது. ஆலமரம் போல் பரந்து நின்ற பெரிய குடும்பங்கள் இப்போது தனித்தனிக் கிளைகளாக மாதிரிக்குடும்பங்களாக, சிறுசிறு நவீன குடும்பங்களாக மாறிக் கொண்டே வருகின்றன.

பொருளாதார மாற்றங்கள், கிராமங்கள் நகரங்களின் விரிவு, மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அத்துடன் தொழில் மயமாக்கபட்டும் வருகின்றன. தொழில் மயமான நாடுகளில் இரண்டு மூன்று தலைமுறைகள் ஒன்று சேர்ந்து, ஒன்றில் ஒன்று தங்கி வாழும் குடும்பங்களாக இருக்கமுடியாது. ஆனால் கிராமங்களில் அப்படி இல்லை. இருந்தும் தற்காலத்தில் கிராமங்களிலும் நவீனகுடும்பங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு காரணம் இளந்தலைமுறையினரின் சுதந்திர உணர்வு, தனிமை, விருப்பு, பொருளதாரத் தேவைகள் என்பவற்றைக் கூறலாம்.

இவ்வாறு கூட்டுக்குடும்பங்கள் தனிக் குடும்பங்களாக மாறுவதற்கு, சமுதாயமும், ஏனையவும் அனுமதிக்கும் போது பெண்களுக்குரிய சகல சமத்துவ உரிமைகளை வழங்குவதில் ஏனோ இன்னும் சமுதாயம் பாரபட்சம் காட்டிவிடுகின்றது. சமுதாயம், சமுதாயம் என்றால் யார்? மக்கள்தான் சமுதாயம். சமுதாயம் மாறவேண்டுமானால் மக்களின் மனங்கள் மாறவேண்டும். இவ்வாறு அமையும்போது தான் புதிய சீர்திருத்தச் சமுதாயம் பிறக்கும். இவை எல்லாம் எமது நாட்டைப் பொறுத்தவரையில் இப்போது எதிர்பார்க்கக்கூடிய விடயமா? எதிர்பார்க்க முடியாவிட்டால் மீண்டும் புரையோடிப் போன சமுதாயம்தான் நிலைத்திருக்கும்.

சமூகத்தில் கல்வியறிவின் அதிகரிப்பினாலும், கிராமங்கள் நகரங்களாக வளர்ச்சியடைவதாலும் பெண்ணடக்குமுறைகள் ஓரளவுக்கு அருகலாம். எனினும் பெண்களுடைய நிலையான இரண்டாந்தரப் பிரஜை என்ற தனிமையில் அடிப்படைமாற்றங்களை ஏற்படுத்த முடியாதென்பது இன்று நிரூபணமாகி விட்டது.

பெண்களின் உழைப்பு சுரண்டப்படுதல், வேலைப்பாகுபாடு, குறிப்பிட்ட சில விடயங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களுக்கு முன்னுரிமை என்பது எமது நாட்டில் மட்டுமல்ல, விருத்தியடைந்த நாடுகளிலும் உள்ளன. பொதுவாக எமது சமுதாயத்தில் ஒரு பெண் எவ்வளவுதான் கல்வியில் முன்னேறியிருந்தாலும், பெண்கள் என்ற பாலை அடிப்படையாக வைத்து அவர்களுக்குச் சில உரிமைகள் மறுக்கப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். இன்று இலங்கையின் சனத்தொகையில் அரைப்பங்கினர் பெண்களாவர். கல்வியிலும் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் நிற்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். சுருக்கமாகக் கூறின் ஆசியாவிலே பெண் கல்வியில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும் என்பதைக் கேட்கும்போது இலங்கைப் பெண்களாகிய நாம் பெருமைப்பட வேண்டிய தொன்றாகும்.

*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்,*
*எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்*
*இளைப்பில்லை காணென்று கும்மியடி!"*
*- பாரதியார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லும் புல்லும்

கைப்பிடித்த கணவனைக்
காதலால் நேசித்து
களிப்புடன் நடப்பது குடும்பம்.

கொண்டவனைக்
கல்லானாலும் கணவன்,
புல்லானாலும் புருஷன் - என
மங்கையர் ஏற்பதேன்?

அதற்கு
இப்படி அர்த்தம் கொள்ள வேண்டும்.
பெண்,
தனக்கு வாய்த்தவன்
நற்குண நற்செய்கைகளைச் செய்யாது
நன்னெறி நீங்கி
வேற்று வழிகளிற் சென்றால்
அற்ப பொருளுக்கு அவன் ஒப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் புல் இழிந்த அற்பபொருள்.
இந்த அற்பபொருள் போல இருந்தாலும்,
அவனை நல்வழிப்படுத்த முயல்கிறாள்.

அவள் மனதிலே
கல் புல்லெனக் கணவன் இருந்தாலும்
அவனைத் திருத்துவோம்,
என்ற பேருள்ளம்,
பேரிரக்கம், பெருந்தன்மை
என்பவற்றால்
அவனை மன்னித்து,
தன்வழிக்கு மாற்றிவிட
தாளாத தாகத்தால்
அவள் நெஞ்சம் கசியும்.

கருத்தும் இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய அடிமட்டத்தில் மாற்றம் எப்போது?

பெண் ஆண் என்ற இரு இனங்களும் இணைந்து வாழ்வதிற்தான் உலகம் இயங்குகிறது. ஆண் வேறு பெண் வேறு என்றோ, ஒருவருக்கொருவர் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றோ இறைவன் படைக்கவில்லை. மானிடர் தமது சுயநலம் கருதி, வாழ்க்கை வசதி கருதி, சில கலாச்சாரங்களை அமைத்துக் கொண்டனர். பெண்ணின்றி உலகம் இயங்காது. அதே போன்ற ஆணின்றி உலகம் இயங்காது. அதாவது சத்தியின்றி சிவம் இல்லை. சிவமின்றி சக்தி இல்லை. இதுதான் நான்மறைகளின் உண்மை எனலாம். இத்தகைய சூழ்நிலையிலே பெண் பிறந்தால் ஏன் பெற்றோருக்கு, மனதில் புண் தோன்றி விடுகிறது? இது வாழையடி வாழையாக, ஒன்றிவிட்ட மரபு போன்று, அறுகம்புல் வேரூன்றுவது போல், சந்ததிகளுக்குக் கடத்தப்பட்டு வருகின்றது. இதற்கு ஏதோ சில பல காரணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் இருந்திருக்க வேண்டும். அவ்வக்கால அரசியல், சமூக, பொருளாதாரக்காரணிகள் இவற்றுக்கு முக்கிய பங்கு எடுத்தன எனலாம்.

சங்க காலத்தையோ அதற்கு முன்னரோ, அதற்குப் பிற்பட்ட காலத்தையோ, நோக்கின் உலகின் பல பாகங்களிலும் அடிமை வாழ்வு, கொத்தடிமை வாழ்க்கை முறைகள் வழக்கில் இருந்தன. இதற்குள் ஆணும் அடிமைதான். பெண்ணும் அடிமைதான். அப்போது அடிமைப்பட்ட ஆண்களுக்கு வீரம் இருக்கவில்லையா? ஆண்மை இருக்கவில்லையா? இருந்ததுதான். ஆனால் அந்தச் சமகால அரசியற்கட்டுப்பாடுகளை, அடிமைத்தளையை மீறி அவர்களால் வெளி வரமுடியாது, அடிமைகளாக கொத்தடிமைகளாக இறக்கும் வரை உழைத்துக் கொடுத்தார்கள். அதாவது அன்றைய நிலையில் அவர்கள் அடக்கப்பட்டார்கள். அதே மாதிரியான வேறு பல சமூகக் கட்டுப்பாட்டு, பாலியற்கடத்தல்கள், கலாச்சாரக் கட்டுப்பாடுகள் என்பவற்றால் பெண்கள் கட்டுப்படுத்தப் பட்டார்கள். அவ்வாறு வாழ வேண்டிய தேவையும் ஏற்பட்டது. ஆனால் இன்று காலங்கள் எவ்வளவோ மாறிவிட்டன. மன்னராட்சி எல்லாம் தலை கவிழ்ந்தது. முன்பு எத்தனையோ ஆண்கள் மன்னருக்குச் சேவகம் செய்து மன்னன் என்ற தலைவனுக்கு அடிமைப்பட்ட நிலை எல்லாம் மாறிவிட்டன. இன்று ஆட்சி முறைகள், நிலைமைகள் மாறியவுடன் தமக்குச் சாதகமாக எல்லாவற்றையும் கூறிக்கொண்டு, ஆண்கள் பலசாலிகள், அடக்குமுறையற்ற சுதந்திரப் பிரியர்கள் என்று கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்நிலை வாதங்கள் தலைதூக்கின. ஆண்கள் இவ்வாறு சுதந்திரப்பிரியர்களாக மாறியபோது ஏன் பெண்களும் மாறியிருக்கக்கூடாது?

பெண்களுக்கும் பழமையை விட்டு இப்போது பூரண சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். அவள் பழைய கட்டுப்பாடுகளை மீற உரிமை உண்டு அல்லவா? இதற்கு ஏன் இன்றைய சமுதாயம், அதாவது பாரதியின் புரட்சிக் கொள்கைகளின் பின், அவன் வழியில் நடந்து வந்த சமுதாயம் மறுத்து நிற்கின்றதோ தெரியவில்லை. சுருங்கச் சொல்லின் இன்று சட்டரீதியாக பெண்களுக்கு சமவுரிமை சில இருந்தும் மதக்கட்டுப்பாடுகள், கலாச்சாரக் கட்டுப்பாடுகள், நம்முன்னோர் கடைப்பிடித்த பண்பாடுகள் எனப்பல வகைப்பட்ட கட்டுப்பாடுகள் பெண்கள் வாழ்க்கையைச் சீரழிக்கச் செய்கின்றன.

பன்னெடுங்காலமாகவே எமது சமுதாய அமைப்பில் பெண் ஆணுக்குச் சரிநிகர் சமானமுடையவளாகக் கருதப்பட்டதில்லை. பெண் சுதந்திரம் அற்றவள். எப்போதும் ஆணுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதுதான் அவளது கடமை என்று அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே மனதில் பதிய வைக்கும் மூடநம்பிக்கையை அவளுக்கு ஊட்டி விடுவர் அவளது பெற்றோர்கள். இந்தக் கருத்துக்களாலேயே அன்றைய சில இலக்கியங்கள், நீதி நூல்கள், பழமொழிகள் என்பவை வலியுறுத்தின.

இலக்கியம் என்பது ஒரு காலச் சமுதாயத்தின் கண்ணாடி என்று கூறுவர். அதாவது சங்ககால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமருவிய கால அதற்குப் பிற்பட்ட கால இலக்கியங்களை நோக்கும்போது அவ்வக்கால அரசியல் சமுதாய வரலாற்றை நாம் இனங்கண்டு கொள்ள முடியும். ஒரு இலக்கியம் படைக்கும் கர்த்தாவிடம், அவன் விரும்பியோ விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ அவனிடம் அன்றைய கால அரசியல், சமூக, பொருளதாரச் சூழ்நிலைகள் புகுந்து விடுகின்றன. இதற்கமையவே பண்டைய சில நீதிநூல்களில் பெண்ணடிமைத்தனம் காலத்தின் தேவையைப் பொறுத்து இடம் பெற்றுள்ளன. அவ்வாறு அது அன்றைய காலச் சூழலுக்கு ஏற்ப எழுதி வலியுறுத்த வேண்டிய கட்டாய தேவை இருந்தது.

இன்று இதே நீதிநூல்கள், இன்றைய விஞ்ஞான யுகத்தில், பரிசோதனைக் குழாயில் கருவை உருவாக்கும் இன்றைய சகாப்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை தானா? என்ற கேள்விக்கு உரிய பதிலை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு இலக்கியமும் அவ்வக்கால நிலைமைகளை அனுசரித்துத்தான் எழுகின்றன என்ற எடுகோளை நாம் வைத்துப் பார்த்தால் பழைய சில நீதிநூல்கள் இக்கால வாழ்க்கையில் பிரயோகிக்க வேண்டிய தேவை இல்லாமல் போகின்றது. எனவே காலத்துக்குக் காலம் கொள்வன கொண்டு, தள்ளுவன தள்ளி இன்றைய இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்திற்கு வந்து விட்டோம். இனியும் பழைய கால சங்ககாலப் பெண்கள் போல், அவர்கள் கடைப்பிடித்த ஒழுக்க முறைகள் போல் பேணி வாழவேண்டும் என்ற நியதி தேவையில்லை. அப்படி அந்த நியதி தேவை என்றால், ஆண்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்கால ஆண்களைப் போன்று போர் வீரர்களாக, கஜரததுரகபதாதிகளின் பாதுகாவலர்களாக, ஒற்றர்களாக, மன்னனுக்குச் சேவகம் புரிபவர்களாக, அரசியல் உரிமை கோரும் நிலையில் தேசாந்த, வனாந்தர வாசிகளாக இன்றும் வாழவேண்டுமே, இதனால் கலம்பகம், பரணி நூல்களும் தோன்ற வேண்டுமே, அப்படியின்றி விஞ்ஞான அதிபதி, வைத்தியகலாநிதி, விண்வெளிவீரர்கள் என்று இன்னோரன்ன நிலைகளில் உலகம் முன்னேறிவிட்டது. இதன் வழி ஆண்கள் புதுமை பெற்று அதிகார பலத்துடன் வாழும் போது பெண்கள் ஏன் பழைய கட்டுப்பாடுகளை மீறக்கூடாது?

1882 ம் ஆண்டு தெய்வீகக் கவி, தீர்க்கதரிசனக் கவி பாரதியார் தோன்றி ஒரு நூற்றாண்டுக்குமேல் ஆகிவிட்டது. அந்தக் காலத்தில் தோன்றிய பாரதி, பெண் விடுதலைக் கவி மழை பொழிந்து தன் சந்ததிக்குப் பாதை வகுத்துவிட்டுச் சென்ற பின்பும், பாரதியின் காலத்தன்மையிலிருந்தோ, அதற்கு முன்னரோ உள்ள நிலைகளிலிருந்து சீர்திருத்த வழியில் மாறுபட வேண்டாமா? காந்தி மகான் காலச்சூழ்நிலையிலிருந்து இப்போது சமூகச்சீர்திருத்தம் முன்னேறி விட்டது. இதை நோக்கும்போது காலத்தின் தேவைக்கேற்ப சீர்திருத்தம் கருதி நன்மை பயக்கத்தக்க முறையில், பழமையான கட்டுப்பாடுகளை இக்கால சமூகம் மீறுவதில் எந்தவித தப்பும் இல்லை எனலாம். இவ்வாறு சமூகம் மாறும்போது சமூகத்தின் ஒரு அங்கத்தினரான பெண்கள், சாத்திரங்களும், பண்பாட்டு வாய்ப்பாடுகளும் மாறுவது வரவேற்கக் கூடியதொன்றே. இதை விட்டு இன்றைய காலச்சூழ்நிலைகளும் பெண்ணுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடநம்பிக்கையான கட்டுப்பாட்டு முறைகளை மேலும் திணிக்க முயல்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றல்ல.

இறுதியாக இன்று அரசியல் பொதுத்துறை ரீதியாக பெண்களுக்கு ஓரளவு சமவுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. அப்படி இருந்திருக்காவிட்டால், மகாகவி பாரதி 1882 ல் தோன்றி புரட்சிக் கருத்துக்களை, பெண்விடுதலைக் கோஷங்களை பரப்பிச் சென்ற பின் ஒரு நூற்றாண்டையும் கடந்துவிட்ட நிலையில் இன்னொரு பாரதி இந்தியாவிலோ இலங்கையிலோ தோன்றியிருப்பானே. அப்படி இல்லை. ஆனால் சட்டங்கள் வழங்கியுள்ள பாதிச்சுதந்திரத்தை சமூக, சமயக் கட்டுப்பாடுகள், முன்னோர் போற்றிய கலாச்சாரப் பண்புகள், என்ற சில அர்த்தம் புரியாத மூடநம்பிக்கைக் கொள்கைகள், மாற்றம் பெற விரும்பாத சமூக அடிப்படைகள், இவற்றில் ஊறிய ஆண்வர்க்கத்தினரின் வாதங்கள், சுயநலத்தன்மை போன்ற அழுக்கேறிப்போன, பாசி படர்ந்தகற்கள்தான் பெண்கள் ஏற ஏற வழுக்கி விழச் செய்துகொண்டிக்கின்றன.

சமூக அடிப்படையில் முன்னேற்றகரமான, அங்கீகரிக்கப்பட்ட மாற்றங்கள் எதுவும் நிகழாமல் பெண்சுதந்திரத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாது. மேலும் மனிதன் தோன்றிய நாட்டொட்டு அவனது இயல்புகள் சந்ததி சந்ததியாகக் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை காலத்தின் தேவை கருதி, சூழல் அறிந்து சிற்சில இயல்புகள் மாற்றமடைந்து வருகின்றன. ஆனால் பெண் சுதந்திரம் என்ற "சுரப்பி" மட்டும் மாற்றம் அடையாமல் மனித உடலுடன் ஒரு கூறாக இணைந்து வருவதுதான் வியப்பிற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது தூய பெண்ணிலைவாதிகள் பெண்ணுரிமையை நாடிப் பல காரணங்களை சமூகத்தில் முன்வைத்துள்ளனர். நமது சமூகத்தில் பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும், அவர்களைச் சார்ந்து வாழவேண்டியவர்களாகவும் உள்ளனர். மேலும் தாய், மனைவி, சகோதரி என்ற பாத்திரங்களே பெண்ணுக்கு அவளது குடும்பத்தில் கிடைக்கின்றன. இந்தப் பாத்திரங்களைக் கவனமாகப் பேணும் பொறுப்பை எமது சமூகம் அவளிடம் ஒப்படைத்துள்ளது. பெண் ஆணைவிட அந்தஸ்து குறைந்தவளாகக் கணிக்கப்படல், குடும்ப அமைப்பினால் சுரண்டப்படுதல், தொழிற்பகுப்பில் சுரண்டப்படுதல், கலாச்சாரம் வழங்கும் குறைவான அந்தஸ்து என்பவை, சந்ததி உற்பத்திச்சாதனமாகப் பெண்ணைக் கணித்தல் போன்றவையும் பெண்நிலை வாதத்தினரைத் தூண்டச் செய்துள்ளன. எனவே பெண்கள் இயக்கம் என்பது சமவுரிமைகளுக்கான ஜனநாயகப் போராட்டமாக இராது, தீவிரமான சமூகச்சீர்திருத்தத்திற்குரிய தன்மானப் போராட்டமாக அமையவேண்டும். அதாவது சமவுரிமைகளை விட பெண்ணடக்குமுறையின் பல்வேறு பகுதிகளான அரசுயந்திரம், மதவழக்குகள், சடங்குமுறைகள், கலாச்சாரப் போதனைகள் என்பவற்றில் உள்ள பெண்ணடக்கு முறைகளின் வேர்களைப் பெயர்த்தெறிய பெண்ணினக்கரங்கள் யாவும் ஒன்றுகூட வேண்டும். வாழ்வின் சகல பகுதிகளிலும் உள்ள பெண்ணடக்கு முறையின் தன்மைகளில் கூர்மையான விழிப்புணர்வும், சளைக்காத போராட்டமும் எத்தகைய சமூகப் பொருளாதார அமைப்பிலும் தொடர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்நிலைவாதம், பெண்விடுதலை, பெண்சுதந்திரம், பெண்ணெழுச்சி எனப் பல சொற்றொடர்கள் இன்று எம்மவர் மத்தியில் பழக்கப்பட்ட சொற்களாகி விட்டன. பல பத்திரிகைகளும் அவற்றுக்குத் தாராளமான பக்கங்களை மனமுவந்து ஒதுக்குகின்றன. இவற்றிலிருந்து ஒன்றை நாம் இனங்காணக்கூடியதாயுள்ளது. அதாவது பெண் இரண்டாந்தரப் பிரசையாகவே சமூகத்தில் வைத்தெண்ணப்படுகிறாள் என்ற உண்மையைத்தானே அவை பறைசாற்றுகின்றன என்ற முடிவை முன்வைத்துள்ளது.

எனவே நவீன பெண்நிலை வாதத்தினரின் முக்கிய கொள்கை தொடர்ந்தும் இனி பத்திரிகைகளிலோ, சஞ்சிகைகளிலோ, ஏனைய கருத்துத் தொடர்புச் சாதனங்களிலோ, பெண்ணைப் பற்றிய எந்தவித தலைப்புகளுக்கும் இடங்கொடாமல் பெண்ணுரிமையை நிலைநாட்டுவதாகவே இருக்க வேண்டும். அதற்கு அனைத்து மாதர் சக்தியும் ஒன்றிணைந்து ஏகக்குரலான கோஷங்களை கொண்டிருத்தல் அவசியம். அத்துடன் சகல மட்டநிலையிலுள்ள பெண்களும் சலிக்காது ஒன்று திரளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி வீதியிலே

பகல் இறந்து விட
இருள் மயம் எங்கும்
இரவுப் பெண் உலவுகிறாள் அங்கே,

மின்மினிப் பூச்சிகளாய்
மின் ஒளிகள் வீதியிலே,
அவள் விழியும் வீதியிலே,

கணவனை எதிர்பார்த்து
காரிகை துயிலில் தரைமீது
சரிந்து விட
கள் மயக்கம்
கண்ணில் பறக்க,
தாண்டி வீட்டையடைந்த
அவள் கணவன்,
ஏண்டி என்ன தூக்கம்?
என்ன வேலை செய்து,
உனக்கு களைப்பும் தூக்கமும்?
எழுந்திரடி!
என்னை எதிர்பார்க்காமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுக்கடி தூக்கம்?
என்று கேட்கும் ஒரு ஆண்,
ஏது நான் செய்தாலும்,
ஆண் என்று ஆணவச்செருக்கு.

சமூகம் அவருடன் உயிர்த் தோழமை,
பெண் ஏது செய்வாள்?

எது செய்த போதும்
அவளைச் சமூகம் நோக்குவது,
எதிர்ப் பக்கமாகவே
சம பக்கம் அல்லவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் சுதந்திரத்துக்காக ஆணினம் வாதாடுவது எப்போது?

பெண்கள் சுதந்திரமாக வாழவேண்டும், ஆண்களுக்கு உள்ள அதேயுரிமை பெண்களுக்கும் உண்டு என்று பெண்விடுதலைக் கொடி தூக்கும் ஆண்களும் எமது சமுதாயத்தில் இருக்கிறார்கள் என்பது வியப்பாக இருக்கிறதா? ஆனால் இந்தச் சுதந்திரக்கொடி எப்போ? எங்கே? தூக்கி நிற்கிறார்கள் என்பது, சிந்திக்கவேண்டிய விடயம். சிந்தனையைத் தூண்டும் விடயமுமாகும். ஆண்களில் இரு பாத்திரங்கள் இந்த உரிமைகளை சுயநல நோக்கோடு, குடும்ப வட்டத்துக்குள் கோரமுயல்வதால் அவர்களின் கோரிக்கை சமுதாயத்தில் பரவலான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை எனலாம்.

ஏன் அவள் கணவன் சொற்படி வீட்டுக்குள்ளே அடங்கி இருக்கவேண்டும்? பெண்களும் சமூகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய அங்கத்தினர்கள். அவர்களுக்கும் பூரண உரிமை உண்டு.... இவ்வாறு பெண்ணினத்தின் சார்பாக சுதந்திரம் கோரி முன்னிற்கும் ஆண்கள் சமுதாயத்தில் அன்று தொட்டு வாழ்ந்து வருகிறார்கள். இந்த ஞானம் இவர்களின் வாழ்க்கையின் இடையில், தமக்கு வரும் அனுபவங்களைப் பொறுத்து சுயநலப் பற்றுள்ள பெண் விடுதலையாளர்கள் எனலாம்.

ஒரு ஆண், குடும்ப உறவில் ஒரு பெண்ணுக்கு, அண்ணாவாகவோ, தம்பியாகவோ இருக்கும் போது இங்கே ஒரு பெண் சுதந்திரத்தை நாம் காணலாம். அவன் சகோதரி திருமணம் செய்தவுடன் மைத்துனன் என்ற உறவு அவனுக்கு வந்து சேர்கின்றது. காலம் செல்ல இந்த மைத்துனன் மனைவியாகிய அவனது சகோதரியை ஏதோ காரணங்களை வைத்து இம்சைப் படுத்த முயல்கின்றான். அவளைத் துன்புறுத்தி "வீட்டுப்படி தாண்டாதே" என அடிமைப்படுத்துகின்றான். இந்த நேரத்திலேதான் சகோதரனாகிய ஆண் பெண் சுதந்திரம் கோரிப் போர்க்கொடி தூக்குகிறான். அவன் தன் சகோதரியைப் பார்த்து "நீ ஏன் பயப்படுகின்றாய். உனக்கு வாய் இல்லையா? அதிகாரம் இல்லையா? அவரை விட நீ எவற்றில் குறைந்து விட்டாய்? உன்னை அடிமையாக நடத்த நீ என்ன அடிமையா? ஆடு, மாடு என்று நினைத்தாரா? உன்னுடைய சீதனப்பணத்தில் தொழில் (கடை) பார்த்துக்கொண்டு உன்னைப் புறக்கணிக்க அவருக்கு என்ன அதிகாரம் உண்டு?" என இங்கு ஒரு ஆணே பெண் சுதந்திரத்தை நிலை நாட்டுகின்றான். இவ்வாறான பேச்சுக்கள் பெண்ணுக்குச் சுதந்திரம் அளிப்பது போன்றிருக்கின்றன. இங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுக்குள்ள உரிமையை ஆண் ஏற்றுக்கொள்ள நினைக்கும்போது மகிழ்ச்சியடைய வேண்டியுள்ளது. ஆனால் இவை சொந்த வாழ்க்கை வட்டத்துக்குள் எழுந்து மடிந்து விடுகின்றன. வெளியில் அமுலாவதில்லை.

மேற்கூறிய அதே சகோதரன் தான் திருமணம் செய்தபோது, தனக்கு வாய்த்த பெண்ணுக்கு, தான் சகோதரிக்கு உள்ள உரிமை என்று பேசியவற்றைத் தனது மனைவிக்கும்தான் என்பதை ஏற்றுக்கொள்வானா? சம அந்தஸ்து கொடுப்பானா? தனது தங்கைக்காகப் பேசிய அனைத்தும் அவனது மனைவியைப் பொருத்தமட்டில் முயற்கொம்பே. அவனது கொள்கை அவனது சகோதரிகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். மனைவிக்கும், மற்ற பெண்களுக்கும் அல்ல. இவர்கள் ஒருவகையான ஆண்கள்.

இன்னொரு வகையான ஆண்களும் எம் சமுதாயத்தில் இருக்கிறார்கள். "பெண்களுக்கு உரிமை இல்லையா? அவள் இல்லாது குடும்பம் இயங்குமா? அவளைக் கட்டுப்படுத்த எங்கேயோ இருந்து வந்த ஆணுக்கு என்ன அந்தஸ்து இருக்கிறது? இவளது தகுதி என்ன? இவளை அடிமையாக நடத்த முடியுமா? அவருக்கு உள்ள அதிகாரம் அவளுக்கும் உண்டு. பெண்கள் என்ன? கையாலாகாதவர்களா? கேலிப் பொருட்களா? தலையாட்டும் பொம்மைகளா?" என்று பெண்ணினத்துக்காகப் பொருமும் ஆண்கள் யார்? தமது அன்பான மகளைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டு, மருமகனின் செய்கைகளை, குணங்களை, நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் பார்த்துக் கொண்டிருக்கும் தந்தைமார்களே ஆவர். இங்கே பெண்ணுரிமை கோரி ஆண்களுக்கு எதிராகப் பொங்கி எழுபவர்கள் அப்பெண்ணைப் பெற்றவரான தந்தையர்களே. இவர் மனைவியும் முன்னாளில் ஒருவரின் மகளாகத்தான் இருந்தவள். அந்த ஒருவருக்கு, அதாவது தனது மாமனாருக்கு மனம் கோணாத மருமகனாக இவர் வாழ்ந்தாரா? என்பதும் கேள்விக்குறி.

மகளுக்காகப் பெண்ணுரிமையை முன் வைப்பவர்களும், சகோதரிக்காக பெண்ணுரிமையை நாடுபவர்களும் என்ற இரு தரப்பினரும் எமது சமுதாயத்தில் குடும்பக் கூட்டுக்குள் தலைகாட்டி மறைகிறார்கள். இதனால் அவ்வச் சூழ்நிலையிலேயே அவை மடிந்துவிடுகின்றன. குடும்பத்துக்குக் குடும்பம் தொடர்ந்து, நீண்டு, நிலைத்து நிற்கும் சங்கிலிக் கோர்வையாக அவை அமையாத காரணத்தினால் பெண்விடுதலைப் பாதையுடன் இணைந்து போக முடிவதில்லை.

பொது நலக் கருத்தோடு, சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளோடு பெண்விடுதலை கோரும் ஆண்களும் மிக அருமையாக இருக்கிறார்கள், என்பதையும் மறக்கமுடியாது. இவர்களுடைய பெண் சுதந்திர தாகம், சமத்துவக் கொள்கை என்பன பெண் சுதந்திரத்தை ஆதரிக்காதோர் முன்னே பலமிழந்து விடுகின்றன. காரணம் அவர்களின் பெரும்பான்மைப் பலமே என்றால் மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலி அடிமைச் சின்னமா?

பண்டைக்காலம் தொட்டு தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியங்களில் திருமணம் என்றவுடன் தாலி, கூறை, மஞ்சள், குங்குமம் என்பன முக்கிய இடத்தைப் பிடித்து வருகின்றன. பண்டைத்தமிழர் கலாச்சாரம் எனும்போது அதற்குள் இந்துமதமும் பின்னிப் பிணைந்தது என்பதை யாரும் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. ஏனெனில் கிறிஸ்தவ மதமோ, முஸ்லீம் மதமோ அந்நியரால் கொண்டுவரப்பட்டு ஆதிக்குடிகளின் மேல் தமது ஆதிக்கத்தைச் செலுத்தித் தாமும் கலந்து கொண்டன என்பது வரலாற்றுண்மை. பொதுவாக நாம் தமிழர் கலாச்சாரம் என்னும்போது அதற்குள் இந்துமதம் மட்டுமல்ல, கிறிஸ்தவமதமும் முஸ்லீம் மதமும் அடங்குகின்றன. அதாவது இந்த மதங்களைச் சார்ந்தவர்களான தமிழ்ச் சமுதாயத்தினர் அடங்குவர் என்பதாகும். மதம் எதுவாக இருந்தாலும் தமிழர்கள் என்ற ரீதியில் திருமணம் எனும் போது அங்கு "தாலி" என்ற மங்கல அணி முக்கிய இடம் பெற்று வருகின்றது. தமிழர்கள் மட்டுமின்றி உலகின் பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன மக்களும் இம்முறையை வெவ்வேறு முறைகளிற் கையாள்கிறார்கள். சில இடங்களில் மங்கல அணியாக கை விரல்களிலும் அணிவிக்கின்றனர். ஆதிக்குடிகள் இடையிலும் இம்மங்கல அணியை அணிவித்தனர்.

"தாலி" என்றால் எல்லோருக்கும் தெரிந்த பொருளாகும். ஒருவன் ஒருத்திக் கோட்பாட்டை வலியுறுத்தி ஒரு பெண் இன்னொருவரின் மனைவியாகிவிட்டாள், என்பதைப் பகிரங்கப் படுத்துவதற்காகவே அப்பெண்ணின் கழுத்தில் தாலி அணிவிக்கப்படுகின்றது. திருமணம் எனும் மங்கல உறவின் போது மணமகன் ஒரு பெண்ணைத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்கிறேன் என்பதற்கும் அடையாளமாக இந்த மங்கலப் புனிதச் சின்னம் அணிவிக்கப்படுகின்றது. மேலும் எவனொருவன் ஒரு பெண்ணுக்குத் தாலி அணிவித்து தனக்கு உரிமையாக்கிக் கொள்கின்றானோ அதே போல தாலி அணிவித்த பெண்ணுக்கும் அவன் உரிமையாகிறான். எனவே தாலி இங்கு ஆணையும் பெண்ணையும் இணைத்து, கணவன்-மனைவி உறவை வலுப்படுத்தி உறுதிப்படுத்தவே இந்த தாலி அல்லது மங்கல நாண் அன்று தொட்டு இன்று வரையும் புனிதமாகப் போற்றப்பட்டு அணியப்பட்டு வருகிறது.

தாலி என்பது அடிமைச் சின்னமா? எங்கே சொல்லப்படுகிறது? புனிதமான மங்கலப் பொருளை இவ்வாறு சொல்பவர்கள் மதியீனர்களே. திருமண உறவின் போது கணவன் மனைவிக்கு அணிவித்து விடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மங்கல அணி எவ்வாறு அடிமைச்சின்னமாக முடியும்? ஒருவன் ஒருத்திக் கோட்பாட்டை வலியுறுத்த கையாளப்பட்ட முறைக்குத் தேர்ந்தெடுத்த கருவியேயன்றி இது அடிமைச் சின்னமல்ல. இதைவிட, பெண்களை மணமான பெண்கள், மணமாகாத பெண்கள் என்று வரையறுத்து இனம் காண்பிப்பதும் இந்த அடையாளச் சின்னமே.

ஆதிகாலத்தில் தாலி எனும் அணியை மக்கள் இலை தழைகளினாலும் பின் சிப்பிகளையும், சோகிகளையும் அணிவித்தனர். பின் நாகரீகம் வளர்ச்சியடைய, உலோகக் கண்டுபிடிப்புகள் ஏற்பட பொன்னில் தாலி செய்யும் வழமை ஏற்பட்டு, இன்று வரை நடைமுறையில் உள்ளது. பின் தத்தம் அந்தஸ்தை வெளிக்காட்ட பொன்னின் எடை கொடியையும் உள்ளடக்கி பவுன் கணக்கில் அதிகரித்தது. இன்று அதிகரித்துக்கொண்டு வருகிறது. இவ்வாறாக வழி வழி வந்த தாலியானது ஒருபோதும் அடிமைச் சின்னமாகாது. ஒருவன் அணிவித்த தாலியை பெண்ணானவள் போற்றி அணிகின்றாள். எனவே இங்கு கணவன் தான் தாலி என்று மதிப்புக் கொடுக்கும் புனிதக் கொள்கையும் எம்மிடையே உண்டு.

ஏன்? எமது சமுதாயத்தில் தாலி இழந்தவள் என்றதும் கணவனை இழந்துவிட்டாள் என்ற அர்த்தம் தொனிக்கிறது. தாலி வெறும் அடிமைச்சின்னம் என்றால் அது அறுந்து விட்டால் நல்லது அல்லவா? ஆனால் அப்படி ஒரு பெண்ணும் எண்ணுவதில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயமும் அவ்வாறு ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் தாலி என்பது இங்கு கணவனுக்கு ஆகுபெயராக வந்துள்ளது. அதன் சிறப்பை விசேடித்து நிற்கிறது. கணவன்தான் தாலி என்று மதித்து ஒழுகும் பண்பு எம்மினக் குலப் பெண்டிர்களிடையே உண்டு. அதை ஒரு போதும் மாற்றவும் முடியாது.

ஆணாதிக்கம் மேலோங்கி இருந்த காலத்தில் பெண்களை மணந்து அவளை அடிமையாக மதித்தபோது அவளுடன் சேர்ந்த தாலியும் அவனுக்கு இருக்கலாமே தவிர அடிமைச்சின்னமாகத் தாலி உபயோகிக்கப்பட்டது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றல்ல. மேலும் இந்த யுகத்தில் தாலியை அடிமைச்சின்னம் என்று கருதும் ஆடவர்கள் இருப்பார்களாயின் பெண் சுதந்திரத்துக்குப் பாதை வகுத்துக் கொடுப்பார்களா? ஒரு மாட்டுக்கு நாண் பூட்டி நாணயக்கயிற்றைத் தன் கைக்கு வைத்திருந்து தன் வழி ஆட்டிப்படைக்கும் வண்டிக்காரனுக்கும், அடிமைச் சின்னம் என்பதை ஒப்புக்கொண்டு ஒரு பெண்ணின் கழுத்தில் நாணைப் (தாலி) பூட்டி அவளை ஆட்டிப்படைக்க நினைக்கும் இந்த வர்க்கத்தினருக்கும் என்ன வித்தியாசம்?

"தாலி பெண்ணுக்கு வேலி" என்பது நம் முன்னோர் கூறிவைத்த முதுமொழி எனலாம். ஆனால் தாலி பெண்ணுக்கு அடிமைச்சின்னம் என்று அந்தக் காலத்தில் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. தாலியை ஒரு பெண் அணிந்திருக்கும் போது அவள் மார்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நேரமும் தட்டிக்கொண்டே இருக்கிறது. இது எப்படி இருக்கின்றது என்று ஒரு சங்ககாலப் பெண்டிர் இப்படி வர்ணிக்கிறாள். "கணவன் கட்டிய தாலி எனது மார்பினில் தட்டிக்கொண்டிருக்கும்போது தாலியானது கணவன் போல் என் மனதுடன் பேசுகிறது. அதாவது உனக்குப் பக்கத்தில் எந்நேரமும் நான் இருக்கிறேன், துணையாக இருப்பேன், அதேவேளை உன்னை வேறோர் ஆடவன் அணுகமாட்டான். இன்னும் என்னைச் சுமந்துக்கொண்டு திரியும் நீ என்னைத் தவிர மற்ற ஆடவரை மனதாலும் நினைக்கக் கூடாது" என்று தாலி கூறுவதாக உணரும் பெண்கள் வழி வந்தவர்கள் தான் இன்றைய தமிழ்ப் பெண்கள். அப்பெண் எந்த இடத்திலும் தாலி அடிமைச்சின்னம் என்று எண்ணியதேயில்லை.

எனவே ஒரு ஆண் ஒரு பெண்ணைத் தன் மனைவியாக்கியமைக்கு அடையாளமாகப் பெண்ணின் கழுத்தில் அணிவிக்கும் சின்னம்தான் தாலியே அன்றி அடிமைச் சின்னமல்ல. அதாவது "மங்கல வதுவைச் சின்னம்" என்பதே இதன் சரியான அர்த்தமாகும். மற்றும் தாலி வெறும் அடிமைச்சின்னம் என்ற அர்த்தத்தில் இருக்குமானால் ஒரு பெண்ணின் தாலியுடன் கூடிய கழுத்தணியை இன்னொரு பெண் அணிந்தால் அதில் விபரீதம் உண்டா? இல்லையா? அவ்வாறு அணிய முடியுமா? ஒரு பெண்ணுக்குக் கட்டிய தாலியை வேறு பெண் அணிந்தால் அது இன்னொருவனுக்குச் சோரம் போவதற்கு ஒப்பான செயல் என்று எமது சமுதாயம் கற்பித்துள்ள பண்பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை நோக்கும் போது இங்கு தாலி என்ற பொருள் கணவன் என்ற உறவுக்கு ஒப்பாக இருக்கிறதேயன்றி அடிமைச்சின்னமாக இருக்கவில்லை.

இப்போதும், எப்போதும் தாலியை வேண்டா வெறுப்பாக, அடிமைச் சின்னமாகச் சுமந்து வருகின்றேன், என்று எந்த ஒரு தமிழ்ப்பெண்ணாவது கூறுவாளா? அப்படி அரிதாகச் சிலர் கூறுவார்களாயின் அவளுக்கு வாய்த்த கணவன், அவளுக்குக் கொடுமை விளைவிப்பவனாக இருக்கலாம். இங்கே கணவனை வெறுக்கும் போது அதன் விளைவாக அவன் கட்டிய தாலியையும் வெறுக்கின்றாள். இங்கேயும் பார்க்கும் போது தாலிதான் கணவன் என்ற எமது பண்பாடு தொக்கி நிற்கின்றது.

தாலி அடிமைச்சின்னம் என்ற அபிப்ராயம் உள்ள சிலர் சற்றுச் சிந்திக்கவேண்டும். பண்டைய மக்கள் வாழ்க்கையை விட, பொதுவாக உலகமே சுருங்கிவிட்ட இந்த விஞ்ஞான யுகத்தில், நவநாகரிக யுகத்தில் எத்தனையோ மாறுதல்கள், கலாச்சாரத் திருப்பங்கள் ஏற்பட்டுவிட்டன. "அடிமைச் சின்னம்" என்ற எந்த ஒரு பொருளையும் ஒருவர் மனிதர் விரும்பமாட்டார்கள். அடிமையாகச் சேவகம் செய்வதையும் விரும்புவதில்லை. அந்தளவுக்கு உலகம் வளர்ந்துவிட்டது. எனவே இன்றும் தாலியை அடிமைச் சின்னம் என்று கற்பித்துக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் சிலர், இந்த விஞ்ஞான யுகத்தில் அதை உடைத்தெறிந்து விட்டு ஏதாவது சுதந்திரச் சின்னத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின் போது அணிவிக்கலாமே. இன்னும் ஏன் அதை மாற்றி அணிவிக்காமல் இருக்கிறார்கள்? இதிலிருந்தே தாலி அடிமைச்சின்னம் அல்ல என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

மேற்கூறிய சில கருத்துக்களை நாம் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது "தாலி அடிமைச்சின்னம்" என்று கூறுவது பொருத்தமற்றதாகும். இன்றைய காலவளர்ச்சியிலும் இவ்வாறு கூறிக் கொண்டிருப்பவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தால் நவீன பெண் நிலை வாதத்தினரின் கருத்துக்களை அவர்களால் ஜீரணிக்க முடியுமா? என்ற கேள்வியும் எழுகின்றது.

"மாதர் தத்தை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்,
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்ந மக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வோ இந்த நாட்டிலே."

- பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகரத்தால் விபரீதமா?

விவாகம், குடும்பவாழ்வு என்பன சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டதொன்று என்று நம்மூதாதையரால் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றது. இன்னாருக்கு இன்னார் என்று ஆண்டவனாலே நிச்சயிக்கப்பட்ட உறவு, புதுவாழ்வு, வாழ்க்கையில் ஒரு திருப்பம் என்றெல்லாம் திருமணம் என்ற பந்தம் பேசப்படுகின்றது. இத்தகைய பந்தம் பல்லோர் முன்னிலையில், பலர் சாட்சியில், இறை சந்நிதியில் சட்டரீதியாக உலகுக்கு அறிவிக்கப்படுகின்றது. இத்தகைய மகோன்னதமான உறவு சிலரைப் பொறுத்தவரையில் இடை நடுவில் அறுந்துவிடுகின்றது. அதாவது அவர்களின் உறவிலே சிறு கோடு தோன்றுகின்றது. இக்கோடு காலம் செல்லச் செல்ல பிளவு ஆகி விவாகரத்து என்ற மதிலை தம்பதியினரிடையே தோற்றுவிக்கலாம். உண்மைதான். இந்த விவாகரத்து கட்டாயம் அவசியம்தானா? அல்லது விபரீதமா? என்பதைச் சிறு கண்ணோக்கினால் நோக்குவது பொருத்தமுடையதாகும். இந்த நோக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நாட்டுச் சமுதாயத்தை மையமாகக்கொண்டு ஆராய்வதன் மூலம் ஓரளவுக்கு இனங்காணக் கூடியதாயுள்ளது.

விவாகரத்து என்றால் என்ன? என்ற கேள்விக்குரிய பதில் எல்லோருக்கும் தெரிந்ததுதான். திருமணம் செய்து கொண்ட தம்பதியர் யாவரும் வள்ளுவன் வழியேதான் இல்வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள் எனக்கூற முடியாது. அவரவர் தலைவிதி வசத்தால் வாழ்க்கையானது நன்றாக மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது. பூஞ்சோலையெனப் பூத்துப் குலுங்குகின்றது. சிலருக்கு முன் செய்த ஊழ்வினையால் திருமணம் செய்த சில வருடங்களின் பின் தம்பதியரிடையே கசப்பு, பிணக்கு அதனால் வெறுப்பு ஏற்படுகின்றது. இந்த நிலைமை எங்கள் நாட்டில் நிறைய உண்டு. இப்படியான ஒரு கொடூரநிலை தம்பதியினரிடையே ஏற்பட்டு விட்டால் அவர்கள் மீண்டும் சந்தோஷமாக எப்படி வாழ முடியும்? இந்த இடத்தில் விவாகரத்து என்பது எமது சமுதாயத்தில் விரும்பி ஏற்கப்படாத செய்கையாக உள்ளது. அந்தளவுக்கு எமது பண்பாடு பாரம்பரியம் விவாகரத்தை வெறுத்து ஒதுக்குகின்றது. விவாகரத்து செய்துகொண்ட ஆணையோ, பெண்ணையோ சமுதாயம் மற்றவர்களைப் போல் சமகண் கொண்டு நோக்குவதில்லை.

விசேடமாகப் பெண்கள் என்றால் எள்ளி நகையாடுகின்றது. ஆனால் அவர்கள் ஏன் விவாகரத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்டார்கள், இந்த நிலைமைக்கு அவர்களை ஆளாக்கிய காரணிகள் எவை? என யோசிப்பதில்லை; மேலெழுந்தவாரியாகப் பார்த்து விட்டு வாழத் தெரியாதவர்கள், குடும்ப வாழ்வின் இலக்கணம் புரியாதவர்கள் என்று வசைமாரி பொழியக்கூடும். மேலும் இவ்விடத்தில் விவாகரத்து ஏன் ஏற்படுகின்றன என்ற கேள்வியைப் புறம்பாக ஒதுக்கி வைத்து விவாகரத்து செய்வதால் விபரீதமுண்டா? எனப் பார்த்தலே இவ்விடத்தில் பொருத்தமுடையதாகும்.

## சமத்துவமற்ற வாழ்க்கைதான் எமது பண்பாடா?

எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை விவாகரத்து என்பது மற்றவர்களால் வரவேற்கக் கூடிய மங்களமான செய்கையல்ல. விவாகரத்துப் பெற்றோர் சபையில் வைத்து எண்ணக்கூடிய யோக்கியத்தையற்றவர்களாக உள்ளனர். திருமணம் செய்து ஐந்து அல்லது பத்து வருடங்களின் பின்னர் சில தம்பதியிரிடையே பிணக்குகள், சச்சரவுகள், மனக்கசப்பு என்பன ஏற்பட்டு ஒருவருக்கு ஒருவர் மீதுள்ள அன்பில் இடைவெளி ஏற்படுவதை நடைமுறையிற் காணக்கூடியதாயுள்ளது. இத்தகைய நிலையில் பெண்ணானவள் தன் மனதுக்குப் பிடித்தவனாகக் கணவன் அமையாமல் தொந்தரவு செய்தாற் கூட அதை அவள் ஏற்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளாகின்றாள். "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்"என்ற பழமொழிக்கு ஏற்ப கணவனின் கொடுமைகளைச் சகித்துக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றாள். அதாவது கணவன் யமரூபமாக நின்று கொடுமைகளைச் செய்தாலும் அப்பெண் சமுதாயத்துக்காக, ஊராருக்காக, கணவன் - மனைவி என்ற போர்வையில் நரக வேதனையைத் தனக்குட் தானே அனுபவிக்கின்றாள். அப்பெண்ணுக்குத் தன் கணவனை விட்டுப் பிரித்து வாழ்ந்தால் பூரண சந்தோஷம், திருப்தி என்பன ஏற்படும் என்றறிந்தும், அவள் அப்படி வாழமுடியாதவளாகின்றாள். காரணம் அவள் தனக்காக வாழவில்லை. சமுதாயத்திற்காக வாழ்கின்றாள். இதுதான் எமது பண்பாடு பெண்ணுக்கு விதித்துள்ள கட்டுப்பாடு.

இவ்வாறாக அப்பெண் எதுவித நிம்மதியுமற்று மூச்சு விடும்வரை காலா காலமாக வேதனை அனுபவித்து மடிந்து விடுகிறாள். இதை நோக்கும் போது அவள் விவாகரத்துச் செய்து கொண்டால் ஏன் சமுதாயம் ஒதுக்க வேண்டும். வாழப்பிடிக்கவில்லை என்றால் விவாகரத்துச் செய்தால் அதனால் விபரீதமா? விவாகரத்துச் செய்துகொண்ட ஆண் மீண்டும் மணக்கோலம் பூணுவதற்கு அனுமதிக்கும் சமுதாயம் பெண்ணுக்கும் அவ்வுரிமையை அளிப்பதற்கு ஏன் தயக்கம்? அவளும் மறுமணம் செய்து கொண்டால் என்ன? இந்தக் கேள்விக்கு எமது சமுதாயம் பதிலளிக்காது. அப்படி அளித்தாலும் அது பெண்களைச் சாடுவதாகவே அமையும்.

மேல்நாட்டவரைப் பொருத்தவரை விவாகரத்துக்குப் பூரண சுதந்திரம் உண்டு. சமுதாயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகரத்துப் பெற்றோர் தாழ்வாகவோ, கேலிக்குரியவர்களாவோ மதிக்கப்படுவதில்லை. மனிதப் பிறப்பு ஒரு முறைதான், அனுபவிப்பவற்றை அனுபவித்துச் சந்தோஷமாக மடிய வேண்டும் என்பது இவர்களது கொள்கை. அதாவது துன்பத்தின் சாயல் கூட வாழ்க்கையில் இருக்கக்கூடாது. வாழ்வது கொஞ்சகாலம். அக்காலத்தைச் சந்தோஷமாக வாழ்ந்துவிட்டுப் போக வேண்டும் என்பது இவர்கள் வாழ்க்கையின் தாற்பரியம். தனக்குப் பிடிக்காத கணவனுடன் பிடிப்பற்ற வாழ்க்கை ஏன் வாழ வேண்டும்? அந்த வாழ்க்கைக்கு அர்த்தம் உண்டா? என்பது அவர்களது கேள்வி. ஒருவரையொருவர் புரிந்து மன மொத்து வாழும் வாழ்க்கை அமையாவிடில் விவாகரத்துச் செய்து கொள்வதுதான் சிறப்பு. அதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஆனால் எமது சமுதாயத்தைப்போல் சமுதாயத்திற்காக, போலிவாழ்வு வாழும் வாழ்க்கை இவர்கள் சமுதாயத்திலே இல்லை. உண்மையை ஒப்பு நோக்கிப் பார்க்கின் விவாகரத்துச் செய்து கொள்வது விபரீதம் எனத் தோன்றுகின்றதா? காலம் முழுவதும் கணவன் - மனைவி எனும் போலி வாழ்க்கை வாழ்ந்து இறப்பதைவிட விவாகரத்துச் செய்து கொள்வதுதான் நல்லது என்ற முடிவை எடுக்க வேண்டியதாயுள்ளது. அதே நேரம் இப்படி விவாகரத்துப் பெற்ற பெண் சமுதாயத்தில் மற்ற பெண்களைப் போல் அதே அந்தஸ்தைப் பெற வேண்டும். இதைச் சமுதாயமும் ஏற்க வேண்டும்.

மேல் நாட்டில் விவாகரத்துப் பெற்று பெண் மீண்டும் திருமணம் செய்ய முடியும். அதே போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களும் செய்து கொள்ளலாம். ஆனால் மறுமணம் இவர்களால் செய்து கொள்ளப்படுபவர்கள் ஏற்கனவே திருமணம் செய்து விவாகரத்துப் பெற்றவர்களாகவும் இருக்கலாம். மாறாக திருமணம் செய்யாதவர்களாகவும் இருக்கலாம். அது பற்றி அவர்களுக்கு அக்கரையில்லை. ஆனால் தமது மனதுக்குப் பிடித்தமானவர்களாக மட்டும் இருந்தாற் போதுமானது. தமது வாழ்க்கையை அமைத்துச் சந்தோஷமாக வாழ்கிறார்கள். இதிலிருந்து இவர்கள் எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும். என்ற கொள்கையுடையவர்கள் என்பது சொல்லாமலே புரியும்.

இச்சமுதாயம் மறுமணத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறது. மற்றவர்களுக்காக வாழவில்லை. தமக்காகவே வாழ்கின்றோம். என்ற கருத்து அவர்கள் வாாழ்க்கையிற் தொக்கி நிற்கின்றது. எமது சமுதாயமோ மறுமணத்தைப் புறக்கணிக்கின்றது. பாரதி முதல் பாரதிதாசன் வரை மறுமணத்தைத் தீவிரமாக வற்புறுத்திய போதும் இன்றுவரை அது உன்னத நிலையை அடையவில்லை. சமுதாயம் இதைத் தரமான செய்கையாக ஏற்கப் பின்னிற்கின்றது. விதவைப் பெண்கள் விதவையாக வாழ்வதையே எமது சமுதாயம் விரும்புகின்றது. இந்த நிலை எமது சமுதாயத்திலிருந்து மாற எவ்வளவு காலம் எடுக்குமென்பது கேள்விக் குறியாகவுள்ளது. இரு 'சமுதாயத்தையும் இந்த விடயத்தில் மட்டும் ஒப்பிட்டு நோக்கும் போது மேல் நாட்டினரது கொள்கைதான் சிறந்தது எனக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பண்பாட்டின்படி கணவன் இறந்த பின்னர் பெண் அமங்கலியாகி சபைக்கு வேண்டாதவளாகி விடுகின்றாள். இதுவும் பெண்கள் மனதை, வாழ்க்கையைப் பொசுக்கும் செய்கையாகும். கணவன் இறந்த பின் ஒரு பெண்ணுக்கு எல்லாம் இழந்ததற்குச் சரி, ஆனால் இன்றைய படித்த, நவநாகரிக யுகத்தில் இவை ஓரளவுக்கு மாறிக்கொண்டு வருகின்றது. கணவனை இழந்து தனிக்கட்டையாக வாழ்வதிலும் பார்க்க மீண்டும் திருமணம் செய்து அப்பெண்தன் வாழ்க்கையைப் பூரணப்படுத்திக் கொள்வதில் எதுவித தப்பும் இல்லையே. மீண்டும் அப்பெண் சுமங்கலியாகி பூவும் பொட்டுமாக வாழ, சமுதாயம் அனுமதிக்க வேண்டும். இவ்வுணர்வை மங்கையருக்கு சமுதாயம் புகுத்த வேண்டும்.

சில பெண்கள் மறுமணம் செய்ய விரும்பாது தனியே வாழ விரும்புவோராயும் உள்ளனர். அது அவரவரது மனோ நிலையைப் பொறுத்தது. விதவையான இளம் பெண்களைப் பொறுத்த மட்டில் (எல்லோருமல்ல) மறுமணம் செய்து புதுவாழ்வு வாழ விருப்பம் இருந்தும் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற நிலையில் மறுமணம் செய்யாது தமது இளமையை வீணே கழித்து வாழ்வை முடிக்கின்றனர். தாம் மறுமணம் செய்ய விருப்பம் இருந்தும் தமது விருப்பத்தைச் சமுதாயத்துக்காகச் சாகடித்து ஒண்டிக் கட்டையாகவே ஆசாபாசங்களைத் தமக்குள்ளேயே பொசுக்கி வாழ்கின்றார்கள். இத்தகைய நிலை மேல் நாட்டுச் சமுதாயத்தைப் பொருத்தவரை இல்லை. இதே போல் எமது சமுதாயமும் உணர்ந்து அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு கொடுத்தால் என்ன? "சமுதாயம்... சமுதாயம்... என்று பெண் சமுதாயத்துக்காகவே வாழ வேண்டுமா? இத்தகைய நிலை இருக்கும்வரை எமது பெண்களுக்கு விடிவு கிடையாது."

மேல் நாட்டுப் பெண்கள் கணவன் இறந்த பின்னர் மறுமணம் செய்து கொள்வார்கள். சமுதாயமே அவர்களுக்கு முன்னின்று மறு திருமணம் செய்து வைக்கின்றது. கணவன் இறந்த பின்னர் தமக்கு ஒரு துணை அவசியம் என்ற ரீதியில் தாம் விரும்பியவர்களைத் திருமணம் செய்து வாழ்கின்றார்கள். இப்படி வாழ்வதால் அவர்களுக்கு என்ன கேடு வந்துவிட்டது? சமுதாயத்துக்கு அஞ்சிவாழும் எமது பெண்களுக்கு என்ன நன்மை வந்துவிட்டது? மேல் நாட்டுப் பெண்கள் சமுதாயத்தைப் போல் எமது சமுதாயம் சீரடையவேண்டும். எமது பண்பாட்டுக்கும், அவர்களது பண்பாட்டிற்கும் ஏணி வைத்தாலும் கூட எட்டாது. இவ்வாறிருந்தும் எமக்கு ஏற்ற விதத்தில் அவர்கள் பாணியை ஓரளவுக்கு என்றாலும் சில விடயங்களிற் கடைப் பிடித்து எமது பெண் சமுதாயத்தைச் சீர்திருத்தவேண்டும். அதற்கு ஆண்களின் அயராத ஒத்துழைப்பு பக்கபலமாக இருக்கவேண்டும்.

மணமுறிவு மணமுறிவாகவே இருக்காது, மறுமணத்தில் முடிய வேண்டும். மறுமணத்தில் முடிய வேண்டும். மறும்மணத்தைச் சமுதாயம் மட்டுமல்ல அரசாங்கமும் மனதார வரவேற்கவேண்டும். பழமையான சமூகக் கெடுபிடிகளில் இருந்து கொஞ்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகி பெண்களுக்கு விடுதலையளிக்கவேண்டும். எமது பண்பாடு முற்றாக மாறவேண்டும் என்பதல்ல. காலத்துக்கு ஏற்றவகையில் மாற வேண்டிய இடத்தில் மாறி பெண்களுக்கு உயர்வளிக்கவேண்டும். அவர்களது உணர்வுகளுக்கு இடமளிக்கவேண்டும். எமது பண்பாட்டில் ஏற்றமிகு பண்புகள் நிறைய உண்டு. பெண்களுக்கு தனிமதிப்புக் கொடுத்து தாய்மை ஸ்தானத்தில் வைத்துள்ள பண்பு மேல் நாட்டிற் கிடையாது. எமது பாரம்பரியம் தூய்மையானது, மேலானது. எமது பண்பாடு தனது கட்டுக்கோப்புக்களை இறுகப் பிடிக்காமல் ஓரளவுக்கு இளகிக்கொடுக்கும் போது எமது பெண்கள் சமுதாயம் சிறப்படையும் மகோன்னதம் பெறும் என்பதில் ஐயமில்லை.

"விடுதலைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம், வெல்லுவம் என்றே
திடம னத்தின் மதுக்கின்ன மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்
உடைய வள்சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்,
இடையிலே பட்ட கீழ்நிலை கண்டீர்.
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?"

- பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாகும் இதர நூல்கள்!

### பெண்களுக்கு - For Women

| | |
|---|---|
| பெண்களின் வாழ்க்கை ஏக்கங்களும் தீர்வுகளும் | 11.75 |
| புகுந்த வீட்டில் பெண்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் | 19.00 |
| வீட்டுப் பராமரிப்பும் வீட்டுப் பிரச்சனை சமாளிப்பும் | 20.00 |
| பெண்களின் நோய்கள் | 35.00 |
| தாய், மகளுக்குச் சொல்ல வேண்டிய விஷயங்கள் | 17.00 |
| வேலைக்குப் போகும் பெண்களின் பிரச்சனைகளும் தீர்வுகளும் | 26.00 |
| இல்லத்தரசிகளுக்கான அறிவியல் | 15.00 |

### குடும்பம் - Family

| | |
|---|---|
| குடும்பம் நடத்துவது எப்படி? | 17.00 |
| கணவன் - மனைவி ஒற்றுமைக்குச் சில யோசனைகள் | 12.00 |
| மருமகள் போற்றும் மாமியாராக இருப்பது எப்படி? | 16.00 |
| குடும்பத்தில் கணவன் - மனைவி கடமைகள் | 12.00 |
| குடும்பப் பிணக்குகளும் தீர்வுகளும் | 35.00 |
| குடும்ப வாழ்க்கை இனிக்க | 20.00 |
| தனிக்குடித்தனமா? கூட்டுக் குடும்பமா? | 27.00 |

### வீட்டு விஷயம் - Household

| | |
|---|---|
| வீட்டுக் குறிப்புகள் | 17.50 |
| வீட்டு விஷயங்கள் | 10.00 |
| சலவைக் கலையும், கறைநீக்கும் முறைகளும் | 12.00 |
| வீட்டுப்பூச்சிகளின் தொல்லைகளும் ஒழிக்கும் முறைகளும் | 21.00 |
| இல்லத்தைப் பராமரிக்கும் வழிகள் | 30.00 |

### கோலம் - Kolam

| | |
|---|---|
| ரங்கோலிக் கோலங்கள் போடுவது எப்படி? | 17.50 |
| வகை வகையான கோலங்கள் பாகம்-1 | 9.00 |
| பாகம்-2 | 12.00 |
| பாகம்-3 | 12.00 |
| பண்டிகைக் கால கோலங்கள் | 10.00 |

### தையற்கலை - Tailoring

| | |
|---|---|
| தையல் கற்பவர்களுக்கான அடிப்படை விஷயங்கள் | 18.00 |
| தையல் இயந்திரங்களைப் பழுதுபார்ப்பது எப்படி? | 10.00 |
| உடைகளின் குறைகளும் நிவர்த்திகளும் | 11.00 |
| விளையாட்டு உடைகளைத் தைப்பது எப்படி? | 8.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையாகும் இதர நூல்கள்!

### பெண்களுக்கான உடை - Dress for Women

| | |
|---|---|
| சிறுமியருக்கான உடைகள் | 27.00 |
| கல்லூரி மாணவிகளுக்கான உடைகள் | 15.00 |
| பெண்களுக்கேற்ற டீன் ஏஜ் உடைகள் | 21.00 |
| பெண்களுக்கான உடைகள் | 23.00 |
| கீழை நாட்டுப் பெண்களின் உடைகள் | 11.00 |

### ஆண்களுக்கான உடை - Dress for Men

| | |
|---|---|
| சிறுவர்களுக்கான உடைகள் | 20.00 |
| கல்லூரி மாணவர்களுக்கான உடைகள் | 20.00 |
| ஆண்களுக்கேற்ற டீன் ஏஜ் உடைகள் | 13.00 |
| ஆண்களுக்கான உடைகள் | 19.00 |
| ஆண்களுக்கான மேலை நாட்டு உடைகள் | 8.00 |

### தோட்டக் கலை - Horticulture

| | |
|---|---|
| வீட்டில் காய்கறித் தோட்டம் போடுவது எப்படி? | 18.00 |
| குறைந்த செலவில் சிறந்த பூந்தோட்டம் அமைப்பது எப்படி? | 27.00 |
| வீட்டில் பயனுள்ள மரங்களை வளர்ப்பது எப்படி? | 24.00 |
| பழத்தோட்டம் அமைப்பது எப்படி? | 12.50 |
| பல்வேறு ரோஜாக்களைப் பயிரிடுவது எப்படி? | 19.00 |

### விவசாயம் - Agriculture

| | |
|---|---|
| வேளாண்மை விஞ்ஞானமும் நவீன விவசாயமும் | 11.00 |
| தாவரங்களைப் பற்றிய அறிவியல் உண்மைகள் | 13.00 |
| சொட்டுநீர்ப் பாசனமும் நடைமுறைகளும் | 17.00 |
| பூச்சிக்கொல்லி மருந்துகளும், பயிர்ப் பாதுகாப்பும் | 16.00 |
| பல்வேறு உரங்கள் தயாரிப்பது எப்படி? | 18.00 |

### பல்வேறு சமையல் - Variety Cooking

| | |
|---|---|
| வட இந்தியச் சமையல் | 17.00 |
| மலையாளச் சமையல் | 15.00 |
| செட்டிநாட்டுச் சமையல் | 9.00 |
| முஸ்லிம் சமையல் | 17.00 |
| சீன உணவு வகைகள் | 18.00 |
| ஆந்திரச் சமையல் | 20.00 |
| உடுப்பிச் சமையல் | 12.00 |
| பிராமணச் சமையல் | 16.00 |
| மேலைநாட்டுச் சமையல் | 16.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியைப் பற்றி...



இந்நூலாசிரியை

**வீக்னா பாக்கியநாதன்**

1975-1978 வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைமாமணிப் பட்டதாரியாகி பின்னர் வேலணை... சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தியமகா வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றியமை.

1981... ஜேர்மனிக்குப் புலம் பெயர்ந்து திரு.சு.பாக்கியநாதன் பீ.ஏ. (புவியியல் சிறப்பு) அவர்களைத் துணைவராக்கியமை.

1984-ல் சிந்திக்கத்தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம் என்னும் ஒப்பீட்டு ஆய்வுநூலை இருவரும் இணைந்து எழுதி வெளியிட்டமை.

1987-1993 வரை கலைவிளக்கு எனும் மாதாந்த சஞ்சிகையை வெளியிட்டு வந்த கணவருக்குத் துணையாசிரியையாகச் செயற்பட்டமை. இன்று இச் சஞ்சிகை கலைவிளக்கு வீடியோப் பத்திரிகையாக வெளிவந்துகொண்டிருக்கிறது.

1987 முதல் இன்றுவரை டோற்மூண்ட். கரிதாஸ் தமிழ்ப்பாடசாலையில் பகுதி நேர வேலையாக ஆசிரியையாகப் பணியாற்றல்.

### 1988 முதல் ஆசிரியை எழுதிய பிற நூல்கள்

| | |
|---|---|
| ஆதங்கம் | (புதுக்கவிதைகள்) |
| அழிவின் சுவடுகள் | (புதுக்கவிதைகள்) |
| கவிமலர்கள் | (மரபுக்கவிதைகள்) |
| பாலர் பாடல் | (பாடல்கள்) |
| உறவுக்குப் போராட்டம் | (சிறுகதைகள்) |
| குறுகிய காலத்தில் தமிழை எவ்வாறு கற்பிக்கலாம்? | (ஆய்வுக்கட்டுரை) |
| மாணவர் கட்டுரைகள் | (பாடநூல்) |
| இலக்கணம் கற்போம் | (இலக்கணப் பாடங்கள்) |
| ஆண்டு-3 செயல்நூல் | (பாடநூல்) |
| குறளின் நிழல்கள் | (நவீன குறள்கள்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org